


# சிவதொண்டன்

மலர் 61

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்"

இதழ் 5 - 6

ஈசுர ஸ்ரீ சித்திரை - வைகாசி

1997 ஏப்பிரல் – மே

அணிதில்லைச் சிற்றம்பலத்து அரனே!
உன் அடைக்கலம்

திருச்சிற்றம்பலம்

படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்செ னாவிற்
கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் பும்முனக் காட்
செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூ
நீறணிந்துன்
அடைக்கலங்கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தரனே.

திருச்சிற்றம்பலம்

— திருநாவுக்கரசு சுவாமிகள்

சிவதொண்டன் நிலயம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃ

# அறிக்கை

| பொருள் | திகதி | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| யாகம் | 04-05-97<br>1-06-97 | ஞாயிற்றுக்கிழமை | காலை 8 மணி தொடக்கம் | சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம் |
| ஆச்சிரம வாழ்வு | 0'-05-97 | ,, | ,, | சிவதொண்டன் நிலையம |
| ,, | 18-05-97 | ,, | ,, | செங்கலடி |
| ,, | 01-06-97 | ,, | ,, | ,, |
| ,, | 15-06-97 | ,, | | |
| ஆயிலியம | 14-05-97 | புதன்கிழமை | நண்பகல் | நல்லூர்த்தேரடி |
| ,, | 10-06-97 | செவ்வாய்க்கிழமை | மாலை | சிவதொண்டன் நிலையங்கள் |

## பொருளடக்கம்


| பொருள் | பக்கம் |
|---|---|
| 1. வையகமும் துயர் தீர்கவே | 49 |
| 2. திருநாவுக்கரசு நாயனார் செய்த அற்புதங்கள். | 50 |
| 3. சருவ ஞானோத்தர ஆகமம் - ஞானபாத வசனம் | 54 |
| 4. சைவத்திருமுறையும் சித்தர் மகா வாக்கியமும் — 3 | 56 |
| 5. சிவசிந்தனை | 59 |
| 6. மாணிக்க மொழிகள் — 3 விலாவிறச் சிரித்திட்டேனே | 60 |
| 7. ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம் | 64 |
| 8. ஞானப்போர் | 67 |
| 9. சிவயோகசுவாமிகள் திருவுருவப்பிரதிட்டை (ஆசிரியருரை) | 69 |
| 10. நற்சிந்தனை | 70 |
| 11. HINDUISM | 72 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன்

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்"

மலர்: 61 | ஈசுர ௵ சித்திரை, வைகாசி 1997 ஏப்ரல், மே | இதழ்: 5 - 6


உ

(திருஞான சம்பந்தப் பெருமானார்
உலகமாந்தர் துயரின் நீங்கி இருமை இன்பமும் பெற்று உய்யும் வண்ணம் அருளிய
திருப்பாசுரத்தின் முதற் பாட்டு)

## வையகமும் துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

**வாழ்க அந்தணர்:** வேதவிழுப்பொருளை நான்மறை ஓதி ஐவகை வேள்வி அமைத்து ஆறங்க முதலெழுத்தோதி வேதமுறை தவறாது அருச்சனை செய்யும் அந்தணர் வாழ்க.

**வாழ்க வானவர்:** தேவதேவனான பெருமானை ஐம்புலன், நாலாம் அந்தக்கரணம், முக்குணம், இருவளி ஒருங்கநின்று ஞானத்தால் பூசனை செய்யும் தேவர்கள் வாழ்க.

**வாழ்க ஆனினம்:** ஆகமமாகி நின்று அண்மிக்கும் அருளாளனை ஆகமநெறி முறைப்படியே அபிடேகமாட்டி வழிபடுதற்குகந்த நறுநெய், பால், தயிர், ஆகியவற்றை நல்கும் ஆனிரை வாழ்க.

**வீழ்க தண்புனல்:** வேதவேள்வி, ஞானபூசனை, ஆகமவழிபாடு என்பவற்றால் பொய்யாவானம் நன்மழை பொழிக. (அதனால் நாடு வளம் பெருகுக)

**வேந்தனும் ஓங்குக:** இறைபூசனைக்கு நேரும் இடையூறு களைந்தும், சீரொடு நிகழ நிவந்தங்கள் விட்டும் நாடு காக்கும் மன்னவன் உயர்க.

**ஆழ்க தீயது:** அரன்பூசைக்கு இடையூறான அசுரத்தனம் ஆதிய தீங்குகள் அழிந்தொழிக.

**எல்லாம் அரன் நமமே சூழ்க:** உயிர்க்குலமெல்லாம் அல்லலறுத்து ஆனந்தமாக்கும் அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சிற் பதித்துப் பொலிக.

**வையகமும் துயர் தீர்கவே:** உலகமாந்தர் துயரம் நீங்கி இம்மை மறுமை எனும் இருமையின்பமும்பெற்று ஈடேறுக.

(ஆணைநமதென்ற பெருமானாரின் இவ்வாழ்த்து மொழி இன்னல் நிறைந்த இக்காலத்தும் எக்காலத்தும் நற்றுணையாகுமே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருநாவுக்கரசு நாயனார் செய்த அற்புதங்கள்

ஆழிமிசைக்கல் மிதப்பில் அணைந்த பிரானடி போற்றி.

தமிழ் நாட்டிலே சிதம்பரத்துக்கு வடமேற்கே சுமார் 60 கி. மீ. தொலைவிலுள்ள திருவாமூர் என்னும் பதியிலே புகழனார் என்னும் வேளாண்குலதிலகர் மாதினியார் என்னும் கற்பிற் சிறந்த காரிகையாருடன் இல்லறம் நடாத்தி வரும் காலையில்ஒரு பெண் மகவையும் ஒரு ஆண்பிள்ளையையும் அரிதிற் பெற்று அவர்களுக்கு முறையே திலகவதியாரென்றும் மருணீக்கியாரெனறும் பெயரிட்டு பெருமையோடு வளர்ப்பாராயினர், திலகவதியார் பன்னிரண்டாண்டெய்திய போது கலிப்பகையார் என்ற அரச சேனாபதியார் அவரை மணக்க விரும்பி சிலமுதியோர்களை புகழனார்பால் அனுப்பி மணம் பேசுவித்தார். புகழனார் மகிழ்ச்சியோடு இசைந்தார். கலிப்பகையார் தாம் விவாகஞ் செய்யுமுன் தம் அரசருக்கு உற்றுழியுதவ சேனையுடன் வடபுலம் சென்று, பகைவனோடு போர் புரிந்தார்.

இவ்வேளையில் புகழனாரும் மாதினியாரும் இறந்தனர். பிள்ளைகள் இருவரும் கவலையுற, சுற்றத்தார் தேற்ற ஒருவாறு தேறியிருந்தனர்.

போர்க்களஞ் சென்ற கலிப்பகையார் அங்கே வீரசுவர்க்கமடைந்த செய்தி கேட்ட திலகவதியார் தீராக் கவலையடைந்து "என்னுடைய பெற்றோர் என்னை அவருக்கே கொடுக்க உடன் பட்டமையால் இவ்வுயிர் அவருக்கே உரியது. இதனை அவருயிரோடு இசைவிப்பேன்" என்று சொல்லி இறக்கத் துணிந்தார். பின், தம்பியார் உளராக வேண்டுமென்ற தயையினால் அது தவிர்த்து வீட்டிலேயிருந்து தவஞ் செய்வாராயினார்.

இது இப்படியிருக்க மருணீக்கியார் எல்லாவகை நிலையாமைகளையும்நன்றாக உணர்ந்து தம்மிடத்திருந்த செல்வங்களனைத்தையும் தான தருமங்களிலே செலவு செய்தார். சிவபெருமான் அருளில்லாமையாலும் கொல்லாமை கொண்டொழுகும் சமண சமயத்தையடைய விரும்பி, சிறிது தூரத்திலேயுள்ள பாடலிபுரத்துக்குச் சென்று அங்குள்ள சமணப் பள்ளியிற் சேர்ந்து, அச்சமயத்தைப் பயின்று, அதிலே தேர்ச்சியடைந்து, அவர்களுக்கு மதத் தலைவராகி தருமசேனர் என்ற பெயர் தாங்கியிருந்தார். இது கண்ட திலகவதியார் உளம் நொந்து அண்மையிலுள்ளதிருவதிகை சென்று வீரட்டானத்தெம் பெருமான் திருக்கோயிலிலே சரியைத் தொண்டு முதலாயின செய்து கொண்டு, தம்பியாரை நினைந்துருகி "என் தம்பியைச் சமணப்படு குழியிலிருந்து மீட்டுத் தரவேண்டும்" என்று வீரட்டானத்திறைவரை வேண்டிக் கொண்டு வந்தார். ஓரிரவு அவர் தூங்கும் பொழுது இறைவர் கனவில் தோன்றி "தபோதனியே! உன் தம்பி முற்பிறப்பிலே என்னையடையத் தவமிருந்தான். இனி அவனைச் சூலை கொண்டு ஆட்கொள் வேன்" என்றார்.

அவ்வாறே தருமசேனருக்குச்சூலை நோய் உண்டாகி உடலை வருத்திற்று. சமணர்களுடைய மந்திர உச்சாடணம், மந்திரித்தநீர், தெளித்தல், மயிற்பீலியால் தடவுதல் ஆகிய எதுவாலும் சூலை நோய் தணியாமை கண்டு அவரைக் கைவிட்டு விட்டார்கள். அந்நிலையில் தருமசேனர் தமக்கையாரிடம் தஞ்சமடையத் திருவதிகை சென்று அவரை வீழ்ந்து வணங்கினார். வணங்கிய மருணீக்கியாரின் நிலையையுணர்ந்த திலகவதியார் "எழுந்திரீர்" என வாழ்த்தி, திருவாளன் திருநீற்றைத் திருவைந்தெழுத்தோதி அணியக் கொடுத்தார். அவர் ஆசையோடும் பக்தியோடும் திருநீற்றைப் பூசினார். திருப்பள்ளியெழுச்சியிலே தமக்கையாரோடு திருவீரட்டானேசுவரர் திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் சென்று வணங்கி தம்முடைய சூலை நோய் நீங்கும் பொருட்டும் உலகத்திலுள்ளோர் ஓதித் தம்முடைய துன்பங்களை நீங்கும் பொருட்டும் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்றபதிகத்தைப் பாடியருளினார். உடனே அவரது சூலைநோய் அவரைவிட்டு நீங்கியது. இது அவர் வாழ்வில் நிகழ்ந்த முதல் அற்புதம்.

மருணீக்கியார் இங்ஙனம் மீண்டும் சைவராயினார். இதனாற் பொறாமை கொண்ட சமணர் ஓரிடத்தில் கூடி, ஆலோசனை செய்து அரசனிடஞ் சென்று, "மகாராசாவே, எங்களுக்குத்தலைவராயிருந்த தருமசேனர் எங்கள் சமயத்தை விட்டுத் தமக்கையாரிடம் சென்று சைவனாயுள்ளார்" என்றனர். அரசன் மந்திரிகளிடம் தருமசேனரைப் பிடித்துவர ஆஞ்ஞாபித்தான். மந்திரிமார் சேனைகளோடு திருவதிகை சென்று அவரை அழைக்க, அவர் "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற மறுமாற்றத்திருத்தாண்டகத்தைப் படித்து, முதலில் மறுத்தாரேனும் பின்னர், "எதற்கும் சிவபெருமானே இருக்கிறார்"என்று நினைத்து அரசனிடம் போகத்துணிந்தார். சென்றதும், அரசன் சமணர் சொற்படி அவரை ஏழுநாள் நீற்றறை இட்டுப் பூட்டி வைக்கக்கட்டளையிட்டான். நாவுக்கரசர் நீற்றறையிலே சிவபெருமானைச் சிந்தித்து 'மாசில்வீணையும்' என்னும்பதிகத்தைப்பாட, அவ்வறை வீணை இசையும், சந்திரனும், தென்றலும் போல குளிர்ந்து இன்பமயமாயிருந்தது. ஏழுநாள் கழித்து நீற்றறையைச் சமணர் திறந்து பார்க்கும்போது அவர் சுகித்திருத்தலைக் கண்டு அரசரிடம் போய் "இனி இவனுக்கு நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுப்பதே" என அரசனும் உடன் பட்டான். நாவுக்கரசர், "சிவனடியாருக்கு நஞ்சும் அமுதாம்" என்று சொல்லி நஞ்சையுண்டும் சுகமேயிருந்தார்.

இதனைக்கண்டுமிகுந்த கோபங்கொண்ட சமணர் அரசனிடம் மீண்டும் சென்று அவனுடைய யானையை அப்பர் மீது ஏவும்படி கூற, அரசனும் அங்ஙனே ஆணையிட்டனன். அப்பர் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து "சுண்ணவெண் சந்தனச்சாந்தும்" என்னும் பதிகம் பாடினார். அந்தயானை அடிகளாரை வலம் வந்து வணங்கி அங்கு நின்ற பாகர்களையும் ஏனையோரையும் அழித்தொழித்தது. எஞ்சிய சமணர் அரசனிடம் சென்று நிகழ்ந்ததை முறையிட்டுப்புலம்பினார்கள். கோபங்கொண்ட அரசன் நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக்கடலிலே தள்ள ஆணையிட்டனன். கொலைத்தொழில் செய்வோரும் அப்படியே செய்தார்கள். நாவுக்கரசர் நடுக்கடலிலே கல்லின் மேலிருந்து, "சொற்றுணை வேதியன்" என்னும் நமசிவாயத்திருப்பதிகத்தைப்பாட, அக்கல்லே தெப்பமாக மாறி அவரைத் திருப்பாதிரிப்புலியூர் பக்கத்திலே கொண்டுசேர்த்தது.

இங்ஙனம் நீற்றறை, நஞ்சுகலந்த பாற்சோறு, மதயானை, கட்டப்பட்டகல் ஆகிய வற்றிலிருந்து பதிகம் பாடித்தப்பித், திருப்பாதிரிப்புலியூர் வந்தடைந்த அப்பரடிகள் மீண்டும் திருவதிகை சேர்ந்தார்.

திருவதிகையில் சில ஆண்டுகள் தமக்கையாரோடு தங்கியிருந்து சரியைத் தொண்டும், திருப்பதிகம் பாடும் தொண்டும் செய்து நடுநாடு சென்று திருவெண்ணெய் நல்லூர் முதலாய தலங்களை வணங்கிக் கொண்டு பெண்ணாகடம் சேர்ந்தார். அங்கேயுள்ள திருத்தூங்கானைமாடம் என்னும் கோயிலினுட் சென்று சிவக்கொழுந்தை வணங்கி "சுவாமி அடியேன் இழிவினையுடையவராகிய சமணர்களுடைய தொடக்குண்ட இத்தேகத்துடனே வாழத்தரியேன். ஆகவே தேவரீருடைய இலச்சினைகளாகிய இடபத்தையும் சூலத்தையும் என்னுடம்பிற் பொறித்தருள வேண்டும்" என்று "பொன்னார் திருவடிக்கொன்று விண்ணப்பம்" என்னும் திருப்பதிகம்பாட ஒரு சிவபூதம் நாவுக்கரசருடைய தோளிலே இலச்சினைகளை இட்டுச்சென்றது.

அங்கும் சிலநாள் தங்கி பின் நிவாக்கரை வழியாக சோழநாடு சென்று, திருத்தில்லையையடைந்து அங்கே கனகசபையிலே ஆநந்தத் தாண்டவம் புரியும் சபாநாயகரையும் சிவகாம சுந்தரி அம்மையாரையும் வணங்கி பாடற்றொண்டும் உழவாரத்தொண்டும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார். இருக்கும் பொழுது சீகாழியில் சம்பந்தர், பரமசிவனது திருவருளினாலே உமாதேவியார் ஞானப்பால் ஊட்ட உண்ட செய்தி கேட்டு அவரை வணங்க வேண்டுமென்ற ஆசையினாலே அங்குச்சென்று அவரால் எதிர்கொள்ளப்பட்டு அவரையும் தோணியப்பரையும் வணங்கிக் கொண்டிருந்தார். சில நாள் அங்கிருந்த பின் சோழ நாட்டின் ஏனைய தலங்களைவணங்க விரும்பி திருச்சத்திமுற்றத்தை யடைந்தார். அங்கே எழுந்தருளியிருக்கும் சிவக்கொழுந்தினிடம் அவரது பூவாரடிச் சுவட்டைத் தன்மேல் பொறிக்க வேண்டி ''கோவாய் முடுகி' என்னும் திருப்பதிகம் பாட இறைவர் ''நல்லூருக்கு வா'' என்றார். உடனே அப்பமூர்த்தி திருநல்லூருக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்ய இறைவர் தம் திருவடிகளைச் சிரசின் மேற் சூட்டியருளினார். அப்போது நாவுக்கரசர் ''நினைந்துருகுமடியாரை'' என்ற திருத்தாண்டகமருளினார். இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார் நாயனார், ''நன்மை பெருக'' என்ற திருவிருத்தத்தில் பாராட்டியுள்ளார்.

அங்கிருந்து புறப்பட்டு திருப்பழனம் போய் சுவாமி தரிசனம் செய்து கொண்டு திங்களூர் வழியே செல்லும் போது அங்கே அப்பூதியடிகள் என்னும் அந்தணர் திருநாவுக்கரசர் பெயரால் செய்யும் தொண்டுகளை யறிந்து அவரில்ல மெழுந்தருளினார். அங்கே அப்பூதியார் விரும்பியபடி அப்பரடிகள் திருவமுது செய்ய உடன்பட்டார். அது படைக்க வாழைக்குருத்து அரிந்து வரச் சென்ற மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டி இறந்தான். அதனையறிந்த நாவுக்கரசர் சவத்தைச் சிவாலயத்துக்குக் கொணரச் செய்து ''ஒன்று கொலாம் அவர் சிந்தை'' என்னும் திருப்பதிகம் பாடி உயிர் பெறச் செய்தார்.

நாள்கள் சில கழிய திருவாரூர் திருமருகல் முதலாய தலங்களை வணங்கிக் கொண்டு திருப்புகலூர் செல்ல அங்கேயிருந்த ஆளுடைய பிள்ளையார் அவரை எதிர்கொண்டழைத்து உபசரிக்க அவரோடு முருகநாயனார் திருமடத்திலிருந்தார்கள்.

சில நாள் கழித்து இருவரும் திருவீழிமிழலை சென்றனர். அங்கே பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசிதீர்க்க இறைவர்பால் படிக்காசு பெற்றனர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சிவபெருமானின் திருக்குமாரராகையாலும் பாடற்றொண்டு மாத்திரமே செய்தமையாலும் அவர் வாசியுடன் காசும் திருநாவுக்கரசுநாயனாரோ இறைவர்க்கு அடியாராதலாலும், பாடற்றொண்டோடு கைத்தொண்டுஞ் செய்தமையால் வாசியில்லாக் காசும்பெற்று அடியார்க்கு அன்னமிட்டார்கள்.

திருவீழிமிழலையின் பஞ்சம் தீர்ந்தபின் இருபேரருளாளர்களும்வேதாரணியமெனும் திருமறைக்காடு சென்றார்கள். அங்கே வேதங்கள் பூசித்து காப்புச்செய்த திருக்கதவுக்கு வந்தார்கள். சம்பந்தர் அப்பரைநோக்கி 'அப்பரே!நாம் அபிமுகத்திருவாயிலால்தான் உளளே செல்ல வேண்டும். அது திறக்க நீரே பாடுமின்' என அவர் ''பண்ணினேர் மொழி'' என்று பாடத்தொடங்கினார். எனினும் திருக்கதவு திறக்கப்படவில்லை. ''இரக்கமொன்றிலீர்'' என்று திருக்கடைக்காப்புப்பாடக் கதவு திறந்தது.

வேதாரணியத்தில்இருவரும் இருக்கும்போது மதுரையிலிருந்து அரசி மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் விடுத்த அழைப்பை ஏற்றுப் பிள்ளையார் அங்குச்செல்ல அரசு திருப்பழையாறை சென்றடைந்தார். அப்பொழுது அங்கேயுள்ள சிவலிங்கத்திருமேனி கொடியசமண்குண்டர்களால் மறைக்கப்பட்டிருப்பதையறிந்து ''உம்முடைய திருவுருவைக் கண்டன்றிபோகேன்''என்று அங்கு வடக்கிருந்தார். இறைவருடைய திருவருளினால் அரசனுக்குஇறைவர் கனவிலே இட்டகட்டளைப்படி அவன் சமணர்களை அழித்தான். அப்போ நாவுக்கரசர், 'தலையெலாம் பறிக்குஞ்சமணர்' என்றெடுத்துப்பாடினார்.

அங்கிருந்து புறப்பட்ட நாயனார் திருப்பைஞ்ஞீலிக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். வழியிலே பசியும் தாகமும் வருத்த மிகவும் இளைத்தார். அவருடைய இளைப்பை நீக்க சிவபெருமான் ஒரு பிராமணவடிவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பொதிசோறு அளித்து அழைத்துக் கொண்டு திருப்பைஞ்ஞீலிக்குச் சென்று மறைந்தருளினார்.

சோழநாட்டிலிருந்து தொண்டை நாட்டிலுள்ள திருக்காளத்தி முதலிய தலங்களையும் வடதிசைத் தலங்களையும் வணங்கிக்கொண்டு உத்தரகைலாசத்தைத்தரிசிக்க விரும்பினார். காசியிலிருந்து அப்பாலிலுள்ள கற்சுரவழியே செல்லும்போது அது கூடாமையால் மேலே செல்ல முடியாது வழியிலே அறிவிழந்து கிடந்தார். அப்போது சிவபெருமான் "நாவுக்கரசனே எழுந்திரு" என அசரீரியாகச் சொன்னார். அவர் ஒரு முனிவராகத்தோன்றி "தேவர்களாலும் அடையமுடியாத திருக்கைலாசகிரியை அடைய உம்மால் முடியுமா? நீர் இத்தடாகத்திலே மூழ்கி திருவையாற்றிலே எழுந்து நம்மைக் கைலாசகிரியில் இருக்கும் கோலத்தைத் தரிசித்து வணங்கு" என்றருளினார்.

திருநாவுக்கரசர் திருவைந்தெழுத்தை ஓதி அவ்வண்ணமே செய்தார். திருவையாற்றில் திருக்குளத்தில் தோன்றி அங்கே திருக்கைலாச மூர்த்தியை தரிசித்து "மாதர்ப்பிறைக் கண்ணியானை" முதலிய திருப்பதிகங்கள் பலபாடிக் கொண்டு அங்கே சில நாள் வைகினார்.

திருவையாற்றிலிருந்த நாயனார் சிலநாட் கழித்துதிருப்பூந்துருத்தியையடைந்து திருப்பதிகங்கள் பாடி, திருமடங் கட்டுவித்து உழவாரத் தொண்டும் செய்து கொண்டிருக்கும் பொழுது சம்பந்தப் பெருமான் பாண்டி நாட்டிலிருந்து வருவதையறிந்து அவரை எதிர்கொண்டு அவருக்குத் தெரியாமல் அவர் முத்துச்சிவிகையைத் தாங்கி வந்தார். அவர் அங்ஙனம் செய்ததை சம்பந்தர் அறிந்தவுடன் சிவிகையினின்றும் விரைவாக இறங்கி, அப்பரைவணங்க இருவரும் திருக்கோயில் சென்று தரிசனஞ் செய்து அளவளாவியிருந்தனர். சம்பந்தர் தொண்டை நாடு செல்ல, அப்பர் பாண்டி நாட்டு யாத்திரையை முடித்துக் கொண்டு திருப்புகலூரை யடைந்தார். அடைந்து அங்கே பதிகங்கள் பாடிக் கொண்டும், உழவாரப்பணி செய்து கொண்டுமிருந்தார். அவர் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் போது, உழவாரத்தினிடையே பொன்னும் மணியும் தோன்ற, அவற்றைப் புல்லோடும் கல்லோடும் ஒப்பநோக்கி அவற்றை உழவாரத்திலேந்தி பூங்கமல வாவியிடைப்புக எறிந்தார். பின், தெய்வலோகத்திலிருந்து அரம்பையர் இழிந்து வந்து அவர் முன் ஆடல் பாடல் செய்து அவரது மனத்தைக் குழப்ப முயன்றனர். அவர் "பொய்மாயப் பெருங்கடலில்' என்னும் பதிகம் பாட தேவமாதர் அவ்விடம் விட்டகன்றனர்.

வாகீசப்பெருந்தகை "புகலூரர் என்னை இனித்தம் சேவடிக்கீழிருத்தும்" என்று எண்ணித் திருவிருத்தங்கள் பலவற்றைப்பாடி'எண்ணுகேன' என்னும் திருத்தாண்டகத்தையெடுத்துதிருப்பாட்டினிறுதிதோறும் "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே" என்று முடித்து,சித்திரைச் சதயமாம் திருநாளில் சிவபெருமானுடையதிருவடிக்கலப்பு பேறுபெற்று சிவாநந்த வடிவமேயாகினார்.

### திருநாவுக்கரசருக்கு மங்களம்.

போற்று திரு வாமூரில் வேளாண்டொன்மை
    பொருவில் குறுக் கையரதிபர் புகழனார்பால்
மாற்றரும் அன்பினிற்றிலக வதியாம்மாது
    வந்துதித்த பின்புமரு ணீக்கியாரும்
தோற்றியமண் சமயமுறு துயரநீங்கத்
    துணைவரருள் தரவந்த சூலைநோயால்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத்திரத்திற்
    பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார்

வந்து தமக்கையருளால் நீறு சாத்தி
    வண்டமிழால் நோய்தீர்த்து வாகீசன்மன்னாய்
வெந்தபொடி விடம் வேழம் வேலைநீந்தி
    வியன் சூலம் கொடியிடபம் விளங்கச்சாத்தி
அந்தமில் அப்பூதிமகன் அரவுமாற்றி
    அருட்காசுபெற்று மறை அடைப்புநீக்கி
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலைகண்டு
    பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தினாரே

– திருத்தொண்டர் புராணசாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சர்வ ஞானோத்தர ஆகமம் ஞானபாத வசனம்

(ஞானபூசனை செய்வோர் இதனைக்கூர்ந்தறிக)

(மலர் 61 இதழ் 3-4 பக் 38 இன் தொடர்ச்சி)

தேவதைகளின் ஆராதனையோ வேத பாராயணமோ, அக்கினியிற் செய்கின்ற யாகங்களோ, அந்த யாகங்களைச் செய்கின்ற வகைகளிற் பலருக்கும் சேரக் கூடிய தட்சிணைகள் கொடுத்தலோ, இவைகளையொத்த எவ்வகைக் காரியங்களோ அவ்விடத்தில் (ஆன்ம சொரூபானுபூதியில்) இல்லை. நிர்மலமாய், எங்குமுள்ளதாய், ஸ்திரமாயிருக்கின்ற அத்தகைய ஆன்ம விஞ்ஞானத்தையே நீ அடை.

மீண்டும் மீண்டும் பிறந்திறக்கும் சம்சார சாகரத்தில் முழுகிப் புகலிடம் தேடியலையும் சீவனுக்கு அப்புகலிடமருள்வது அந்த ஆன்ம விஞ்ஞானத்தையல்லாமல் வேறொரு பொருளுமில்லையென்றே அறி.

அப்பரமான்மாவை அதுவே தானாய், அஃதுண்மையாயுள்ளவாறே எவன் உறுதியாயுணர்வனோ, அவன் எல்லாவித அவஸ்தைகளையும் அடைந்த போதிலும் ஒரு முயற்சியுமில்லாமலே முத்தியடைவானென்று அறிந்துகொள்.

ஆன்ம லாபத்திலும் சிறந்த வேறு லாபம் எதுவும் எங்குமேயில்லை. ஆகையால் நீ எப்போதும் ஆன்மாவையே உபாசனை செய். இந்த தேகத்திலுள்ளவன் போன்ற ஆன்மா எவனோ, அவனே எங்கும் ஏகமாய்ப் பொருந்தியிருக்கும் பரமான்மாவாகுமென்றறி.

ஆன்மா பிராணனல்ல, அபானனுமல்ல, அவ்வாறே அவைகட்கு மேலாகிய பொறிமனமாகிய கருவிகரணங்களில் எதுவுமில்லை. அது அனைத்தையும் அறிகின்றதாய், நித்தியமாயுள்ள பரிபூரணவஸ்துவேயாகும் எப்போதும் நீ அவ்வான்ம சிந்தனையையே உள்ளத்தே தரித்திரு.

எல்லா ஒளிகளுக்கும் ஆதாரமாய் ஒளியை அளிக்கும் களங்கமற்ற அந்த ஆன்மாவில் மேலான பிரகாசம் உள்ளிலோ வெளியிலோ உள்ளவோர் தனியிடத்திலில்லை. வெகு தூரத்திலோ சமீபத்திலோ உள்ளதொரு தனியிடத்திலும் இல்லை. அது எவ்விடத்தும் வியாபகமாய் நிறைந்து பிரகாசிக்கின்றது. அதன் கண்ணே உன் சிந்தனையை எப்பொழுதுஞ் செலுத்து.

பகுக்கப்படுகின்ற குறுக்கிலும் நெடுக்கிலும் மேலும் கீழும் உள்ளும் புறம்பும் எல்லாவிடங்களிலும் எப்பொழுதும் நிலைத்திருக்கும் சூனியமாய், வேறொரு ஒளியின் தேவையின்றி சுகமாகவே பிரகாசித்துக் கொண்டிருக்கிற ஆன்மாவையே என்றும் நீ மேன்மேலும் தியானி.

அவ்வான்மா சூனியமுமல்ல, அசூனியமுமல்லதாம், அசூனியமுமாகும், சூனியமுமாகும்: தானே எவ்விடத்தும் வியாபகமாய்ச் சிறிதேனும் பக்கச் சார்வற்றுள்ள அவ்வான்மாவையே சதாகாலமும் சிந்தனைசெய்.

மலமென்னும் நோயற்றதாய் தனக்குப் பிறிதொரு ஆதாரமுமில்லாததாய் சாதியும் நாமரூபங்களும் சாராதிருக்கின்ற அந்த நிஷ்களங்க நிர்க்குண ஆன்மாவை நீயும் இடைவிடாமற் தியானி.

தன்னைப்பற்றித் தாங்குகின்ற பொருளுமில்லாததாய், தான் பற்றித்தாங்குகின்ற பொருளுமில்லாததாய் தனக்கு உவமானம் ஏதும் சொல்லமுடியாததாய் மலமற்ற சுபாவம் வாய்ந்ததாய் நித்தியமாய் பிரமாணங்களைக் கொண்டறியவொண்ணாததாய் நிலைத்திருக்கும் ஆன்மாவை எப்போதும் மகிழ்வுடன் தியானி.

கருமங்கள் எல்லாவற்றையும் விட்டொழித்து. ஆசைகளையும் அறவொழித்து. சனசமூகத்திலிருந்து விலகி பிறகு எப்போதும் தன்னிலேயே உள்ள தன்னையே தன்னிடத்திலேயே தன்னைக் கொண்டே தியானுக்குக.

நாடு, சாதி. உலக வழக்கிலுள்ள குலம் ஆச்சிரமம் முதலாய இவைகளை அநுசரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்திற் பொதிந்துள்ள அநேக வித எண்ணங்களையெல்லாம் ஒழித்து தனது சொருபத்தின் தியானத்தையே விவேகி நீங்காதெப்பொழுதும் செய்யக் கடவன்:

இதுவே மந்திரமாகும். இதுவே தேவதாதர்ச்சனை ஆகும். இதுவே தியானம் என்று சொல்லப்படுவதுமாகும். இதுவே தவமுமாகும். ஆகையால் எண்ணங்கள் அனைத்தையும் ஒடுக்கி சுவசொரூப சிந்தனையொன்றையே நீ துணிந்து செய்.

நான் எண்ணமில்லாதவனாகும் எண்ணங்களோடு கூடியுள்ள மனத்தை எண்ணுதற்கு ஓரிடமும் கிடைக்காததாகச் செய். அனைத்தையும் ஓயாது நினைக்கின்ற மனத்தை ஆன்மாவிலேயே நிலைபெற நிறுத்தி மற்றொன்றையும் மனததினால் நினையாதிரு.

அவ்வான்மா சிந்திக்கக்கூடிய வஸ்துவல்ல; சிந்திக்கக்கூடாததுமல்ல, அது சித்தமன்று. அதுவே சித்தமுமாகும். எந்தவொரு பக்கத்திலும் சாருதலின்றி எங்கும் சமமாய் வியாபித்துள்ள பரமான அவ்வான்மாவை எப்பொழுதும் தியானி.

மனத்தை விஷயப்பற்றற்றதாக நிலையுறச்செய்து மனத்திற்கெட்டாததாகிய அவ்வான்மாவையே நீ எப்பொழுதும் தியானி. தத்துவங்களெல்லாங் கடந்துள்ள அக்களங்கமற்ற ஆன்மாவின்கண் எந்தசுகம் பரிபூரணமாய் சித்தித்திடுமோ அது திரிபற்றதாய் நினைக்கமுடியாததாய் தனக்கு மூலமானதெதுவுமில்லாததாய் திருஷ்டாந்த உபமானமெதுவுமில்லாததாய் முடிவற்றதாய் விளங்கும். அதுவே அனைத்திலும் மேலான பரமானந்தமென்று சொல்லப்படுவது அதனில் நீ மூழ்கு,

விடய வாசனைகளெல்லாவற்றையும் அறவொழித்து மனத்திற் பரந்தோங்கும் நினைவுகளையெல்லாம் நீக்கு. எப்பொழுது மனம் எந்நினைவுமற்ற மோனநிலை எய்துமோ அப்பொழுது அத்துவிதத் தன்மயமாய்த் திகழும். அதுவே பரமானந்தம் எனப்படும். எல்லாத்திக்குகளும், எல்லா விடங்களும், எல்லாக் காலங்களும் ஆன்மமகாயோகத்திற்கு ஏற்றவையே என்று நூல்கள் சொல்லுகின்றன. சீவர்கள் அடைகின்ற வர்ணாச்சிரம மாதிய பேதங்களால் அவர்களது ஞானசொரூபத்தில் அற்பமாத்திரமேனும் பேதம் சாராதென்றறி.

பசுக்கள் பலவித நிறங்களுடையன எனினும் அவ்வெவ்வேறு நிறப் பசுக்களின் பாலெல்லாம் ஒரு நிறமே. பலவிதமான குணங்களையும் உருவங்களையுமுடைய உயிர்களெல்லாம் பலநிறப்பசுக்களை ஒத்தன. அவ்வுயிர்களினுள்ளேயுள்ள ஏகஞானசொரூபம் பாலின் ஒரே நிறத்தைப் போன்றதாகுமென்று விவேகிகள் அறிகின்றார்கள். இது எல்லாச் சீவர்களுக்கும் ஞானசொரூபம் ஒன்றே என்பதற்கு உவமானமாகும் என்றறி.

அந்தப் பிரமசொரூபம் எல்லாப் பொருள்களிலும் பொருந்தி வியாபித்து எங்கும் முகமுள்ளதாகப் பிரகாசிக்கின்றது. உள்மனத்தை அப்பிரமத்தில் ஓய்வில்லாமல் எப்பொழுதும் நிலைக்கச்செய்து; தேசம் திக்கு முதலியபேதங்களைச் சிந்தியாதிரு.

இப்புவியில் - இங்கேயே - அந்தப்பரமான் விண்கண் நிலையுற்ற சீவன்முத்தனுக்கு ஒரு அடையாளமுமில்ல. ஒரு ஆச்சிரமுமில்லை; ஒரு ஆசாரமுமில்லை; அந்தத்தீர புருஷன் ஒன்றைச் செய்ததனால் அதனின்றும் அவனுக்கு யாதோர் பிரயோசனமுமில்லை; அவன் செய்ததாக கருமமும் ஏதுமில்லை. இதைச்செய்க என்னும்வேதவிதியும் அவனுக்கில்லைஎன்றறி.

நடக்கினும் நிற்கினும் நித்திரைசெய்யினும் விழித்திருப்பினும் போசனம்பண்ணினும் நீர் குடிக்கினும், பெருங்காற்று, கடுங்குளிர், கொடும் வெய்யில் ஆகியவை தாக்குகின்ற காலத்திலும் வேறெவ்வித அவத்தையிலும் எக்காலத்திலும், பயமும் தரித்திரமும் ரோகங்களும் எரிக்கின்ற சுரமும் மாந்தமும் நேரிடுங்காலங்களிலும் ஆன்மநிஷ்டனாய் சாந்தனாய், பாகுபாடற்றவனாய் ஆன்மதிருப்தனாய் இருப்பவன் சற்றும் கலக்கமடைய மாட்டான்.

போனாலும் வந்தாலும் நான் போனவனுமாகேன் வந்தவனுமாகேன் போனதும் வந்ததும் தேகமேயன்றி அசல பரிபூரண ஆன்மாவாம் நானல்ல, நாடுங்கால் எனக்குப் போக்குமில்லை வரவுமில்லை. நான் சர்வதிருசியங் கட்கும் காரணமாகிய மாயையின்-நிலையற்ற மாறுதலடைகின்ற குணங்களில் முன்புதோய்ந்திருந்தவனுமல்ல இனித் தோயப்போகிறவனுமல்ல.

- தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் திருமுறையும் சித்தர் மகாவாக்கியமும் - 3

( மலர் 61 இதழ் 3 - 4 பக்கம் 36 இன் தொடர்ச்சி)

## மகாவாக்கியத்தின் பொருள் தெரிந்தல் - 2

### ஒருபொல்லாப்புமில்லை

வெளிப்படைப் பொருள்

நாம் அனைவரும் திருவருள் வளாகத்தில் வாழ்ந்து வருகின்றோம். அதனால் வாழ்வில் நமக்கு ஒருவித பொல்லாப்பும் இல்லை என்பதாம். பொல்லாப்பு=தீங்கு. இல்லை=அணுகாது. அதாவது இறைவன் இன்னருளால் தீங்கு எவையும் அணுகா. அணுகினும் "எரி மூன் வைத்தூறு" போலக்கெடும். வைத்தூறு-வைக்கோற்சிதறல். தீங்கனைத்தும் வெந்து சாம்பராம் என்றபடி. பொல்லாப்பு என்பதற்கு தீங்கு அவலம், இடர், ஏதம், பொல்லாங்கு துன்பம் முதலிய பரியாயச் சொற்களுண்டு. பாற்கடலுள்வாழும் மீன் அதனை அறியாதவாறுபோல நாமும் அருட்கடலின் அமைதியை அறிவதில்லை.

துன்பங்கள் வரும்வழியை ஆதி ஆன்மீகம் ஆதிபௌதீகம், ஆதிதைவிகம் என மூன்று என்பர்; ஆதிஆன்மிகம் உயிர்களால் வருவன, ஆதிபௌதிகம் பூதங்களால் வருவன; ஆதி தைவிகம் தெய்வங்களால் வருவன. இம்மூவகைத் துன்பங்களும் நீங்குதற் பொருட்டாகவே பெரியோர் சா ந் தி வா சகத்தை, "ஓம் சாந்தி சாந்தி சாந்தி" என்று மும்முறை கூறுகின்றனர். தெய்வச்சேக்கிழாரும் "தன்னால் தன்பரிசனத்தால் ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்" ஆன (உண்டாகும்) பொல்லாங்குகளை நீக்கிக் காப்பவன் அரசன் என்கிறார்.

இனி, "சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை" என்று ஔவை மூதாட்டி கூறுவதும் நோக்கற் பாலதாம். மேலும் துன்பம் சுடச்சுட கன்மம் தொலையும்; கன்மம் தொலைய பிறவிப்பிணி இல்லையாம் என்பது சமயமரபு. "மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின் கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொண்ளும் அதனாலும் ஒரு பொல்லாப்பும் எமக்கில்லை" (பெரியபுராணம்)

ஞானசம்பந்தப் பெருந்தகையார்

"உருகும் மனம் உடையார்க்கு உறுநோய் அடையாவே (திருமுறை 1) என்றும், மங்கையர்க்கரசியார் பிள்ளையாரை நோக்கி சமணர் கொடியர் பொல்லாங்கிழைப்பர் என்று அஞ்சியபோது "ஈனர்கட்கு எளியேனலேன் திருவாலவாயரன் நிற்கவே" என்றும் கூறியருளியதும் பொல்லாப்பின்மையைத் தெளிவுபடுத்துவது.

திருநாவுக்கரசு சுவாமிகள்

"அச்சமிலை நெஞ்சே" அரன் நாமங்கள் நிச்சலும் நினையாய் என்றும் (திருமுறை 5/60/2) அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமிலை என்றும் கூறுவர். ( திருமுறை 4/2/1)

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

"அல்லல் என்பன தீர்த்திடுவான் அடைந்தவர்க்கு அமுது ஆயினான்" என்பர். அதாவது சிவபிரான் அடைபவற்கு அமுது அனையன். அவனை அடைந்தார்க்குத் துன்பம் - பொல்லாங்கு எவையும் இல்லை என்பதாம்.

> "பாலாழி மீனாளும் பான்மைத் தருள் உயிர்கள்
> மாலாழி ஆளும் மறித்து"

என்பது திருவருட்பயன்

மாணிக்கவாசக சுவாமிகள் இறைவன் அவர் உயிரையும் உடலையும் உடைமைகளையும் ஆட்கொண்டபோதே த ன தா க் கி க்கொண்டான். ஆதலின் எதுவித இடையூறும் இல்லை என்கிறார்.

> "அன்றே என்றன் ஆவியும் உடலும் .........
> குன்றே அனையாய் ...... நீ கொண்டிலையோ
> இன்றோர் இடையூறு எனக் குண்டோ"

என்பது அவர் வாக்கு (திருமுறை 8/33/7 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொல்லாப்புமில்லை என்பதில் மேலான மறை பொருளும் ஒன்று உண்டு. ஆத்மா, பிரம்மம் மேலானது. அதைவிட உயர்ந்தது ஒன்றும் இல்லை. இது வெள்ளத்தால் வெந்தழலால் வியத்தகு படைக்கலங்களால் வியமாட்டாதது என்னும் கீதையின் பொருளும் பொதிந்து கிடக்கின்றது.

ஞானியர் கருத்து

இனி எங்கள் குரவர் ஒரு பொல்லாப்பு மில்லை என்பதற்குத் தரும் விளக்கத்தினை அனுவதித்துத் தருகின்றோம். "துன்பம் நன்மையை அடையும் வாழ்வொழுங்கு என்பதையும், துன்பத்தை இன்பத்தைப் போலவே எதிர்கொள்ள வேண்டும் என்பதையும், சுவாமி (யோகசுவாமிகள்) துன்பமும் ஓர் உணவென்றும் கரும்பை நசித்தால்தான் சாறு வருமெனவும் வில்லங்கத்துக்குள்ளே விளங்கும் நல்லருள் எனவும் கூறியிருக்கின்றார். துன்பம் கன்மம் தொலையும்வழி எனவும், குப்பைகள் கொளுத்தி எரிக்கப்படுகின்றன அன்றி அதனால் ஆன்மாவுக்கு ஒன்றுமில்லை எனவும் அருளியுள்ளார். இத்தகைய தெளிவு பெற்றோருக்கு துன்பம் பொல்லாப்பாக அமைவதில்லை; அவர்கள் இடும்பைக்கு இடும்பைபடுப்பர். ஆதலால் ஒரு பொல்லாப்புமில்லை என்னும் மந்திரம் மனத்துயரை மாற்றும் மருந்தாக அமைகிறது.

"அன்றியும் துன்பத்தைத் தைரியத்துடன் எதிர்கொள்வதாலும் வீரத்துடன் தாங்கிக் கொள்வதாலும், கொண்ட கொள்கையிலிருந்து தவறாது ஒழுக்கநெறியில் செல்ல முடிகின்றது. ஆதலால் இப்பெரும் பெயர் தரும = நெறிகாட்டும்திருவாய்மொழியாகவுமுள்ளது"

"மாயா புரியின் மயக்கத்தினின்றும் நீங்கியோருக்கு ஒரு பொல்லாப்புமில்லை என்பது ஒப்பற்ற அநுபூதி ஞானமாகும். நாம் நித்தியர், அன்றும் இன்றும் என்றும் இருந்தபடியே இருக்கின்றோம், நாம் தேசகாலம் யாவும் கடந்தவர். நாம் நிறைதரு சித்து; சின்மயர்; தூய அறிவினர்; எம்மிடம் உவமை கடந்த இன்பமுண்டு, மாறிலா மகிழ்ச்சியே எமது இயல்பு" என்பார். (மகாவாக்கிய விளக்கம் பக் 4 - 5)

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தில் ஒரு பொல்லாப்பும் இல்லை என்பதன் மூலக்கரு

பத்தரது திருவேடத்தையும் பரமேசுவரன் எனக் கொண்டு வழிபடுக என்கின்றது. ஞான சாத்திரம்; பிள்ளையார் சிவாலய வழிபாட்டினால் பொல்லாங்கு எல்லாம் தீரும் என்று அருளுவர்; அதனை,

இடியார்குரலே றுடைய எந்தை
துடியார் இடையாளொடு துன்னும்
கடியார் பொழில் சூழ் தருகாழி
அடியார் அறியார் அவலம்மே

( திரு 1 / 34 / 3 )

இடியேறென முழங்கும், இடபத்தை உடைய உடுக்கை அன்ன இடை கொண்ட உமையவளுடன் நிலவுஞ் சிவபெருமான் உறையூர் சீகாழி பரவும் அடியவர்கள் அவலம் அடையார் என்று குறிப்பிடுகின்றார். அறியார் = அறியமாட்டார். அஃதாவது இல்லை என்றபடி. எனவே ஆலயவழிபாடு பொல்லாப்பு அணுகாது பாதுகாக்கும் என்பதாம்.

மேலும் அவர் பல இடங்களில் இறை வழிபாட்டினால் துன்பம் - பொல்லாப்பு தீரும் என்று சொல்லுகிறார் அதனை,

அம்பொன் ஆலவாய்
நம்பனார் கழல்
நம்பி வாழ்பவர்
துன்பம் வீடுமே ( திரு 1 / 94/7)

பிறையும் புனலும் அரவும் அணிந்த திருச்சடையினராய நிமலனை அவனுறையும் நெய்த்தானத் திருப்பதி சென்று பணிவார்க்குப் பழி பாவம் பறையும் என்கிறார். பதிகத்தைப் படிப்போம்.

பறையும் பழி; பாவம்படு துயரம்பல தீரும்
பிறையும் புனல் அரவும் படு சடையெம் பெருமானூர்
அறையும் புனல் வருகாவிரி அலைசேர்வடகரைமேல்
நிறையும் புனை மடவார் பயில் நெய்த்தான மெனீரே

பறையும் = நீங்கும் ( 1 / 15 / 2 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் நமது கருமங்களை மாற்றி நமக்கு அருளா நிற்கின்றான். அவன் பேயோடாடி; சீகாழிப் பதியான்; அவனைப் பணியவல்லார்க்கு இடர் இல்லை. இங்கு பொல்லாப்பு நீங்குமாறு கூறப்படுகின்றது.

இனி, பிள்ளையாரது முதல் மூன்று திருமுறைகளிலும் பொல்லாப்பு இல்லையாகி நாம் வாழ அவர் தெரிவிக்கும் கருத்துக்களைச் சுருக்கமாகத் தருவோம்.

நாம் இறைவனை வழிபடுவோமாயின் அவன் பொல்லாங்கு எவற்றையும், இல்லையாகும்படி துடைத்து அருள்வான். நாள்கள் கழியுமுன் நாம் நஞ்சணிகண்டனுக்கு ஆட்செய்யவேண்டும். அவன் நமக்கு மட்டுமல்ல நம்கிளைக்கும் துன்பம் வாராமல் காத்தருள்வான். கேடுபடாத்திறம் அருள்வான், தீர்த்தியாஎன், அவன் சிவபுரத் திருப்பதி சென்று வழிபட்டால் நம் இடர் கெடும்; உயர்கதி பெறுதலும் கைகூடும்.

காழிநகர்க்கடவுள் துன்பமும் ஆவான் துன்பம் துடைப்போனும் ஆவான். உமையவள் பங்கன் என்று உள்குவார்க்குத் துன்பங்கள் அணுகாவகை பேணுவான். யாரொருவர் திருப்பூவணத்தீசனை ஏத்துவாரோ அவர்களுக்குக் கொடிய துன்பங்கள் இல்லையாகிவிடும். திருவானைக்கா ஈசனை வேண்டி வாழ்வார்க்கு ஏதம் எவையும் அணுகா. இறைவனை எண்ணவல்லார் எல்லாம் இடையூறு இன்றி வாழ்வார்கள்.

மேலும் அவன் சுண்ண வெண்ணீறணி அண்ணல் ஆடானைப்பதி அப்பன். வண்ணமாமலர் தூவி எண்ணக்கைதொழுது எண்ணுவார் இடர் ஏகும். இன்பம் துய்க்கலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில் ஒரு பொல்லாப்பும் இல்லை மகாவாக்கியத்தின் மூலக்கரு.

முத்தீ அனைய வேல்பிடித்த தீவண்ணர், அரநெறி அண்ணல்; எம் உள்ளத்து உளர்; எத்திசைப்புகினும் அங்கு வருவார் எமக்கொரு தீதில்லை, பொல்லாப்பு இல்லை என்கின்றார். அதனை,

> எத்திசைப் புகினும் எமக்கொரு தீதிலை
> தெத்தே எனமுரன் றெம்முன் உழிதர்வர்
> முத்தீ அனையதொர் மூவிலை வேல்பிடித்
> தத்தீ நிறத்தார் அரநெறி யாரே
>
> (திரு 4 / 17 /1)

கடல் நஞ்சு அருந்தி ஏதம் ஒன்று அடையாதவன் எப்பிரான். வானோர் பொல்லாப்புத் தீர்த்த அப்பன். அவனுக்கு நாம் அடிமைகள் ஆகி உள்ளோம். வான் அசைந்து, மண் நடுங்கி மலை ஆட்டம் எடுத்து, கடல் கொந்தளித்து நீர் பெருகி, நட்சத்திரம் ஆயினவும் வீழலாம் கதிரோன் வீழலாம், அது போழ்தும் ஏதம் - பொல்லாப்பு - வரா என்கிறார்:

> வானம் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையுந்
> தானம் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
> மீனம் படிலென்விரிசுடர் வீழிலென வேலைநஞ்சுண்
> டூனம் ஒன்றில்லா ஒருவனுக்கு காட்பட்ட உத்தமர்க்கே
>
> என்பது அது (திரு 4/112/8

மேலும் சிவபெருமான் வேதவடிவினர்; மான் மழுவேந்தி; நிலவணிந்த சென்னியர்; எம்பிரான்; தில்லையில் நடம் இயற்றும் தேவன்; அவன் நமக்கு இடர் ஏதும் வத்தவழியும் நீக்கி அருளுவான் என்று குறிப்பிடுகின்றனர். அதனை,

> மறையனார் மழுவொன் றேந்தி மணிநிலாஎறிக்குஞ் சென்னி
> இறைவனார் எம்பிரானார் ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்
> சிறைகொள்நீர்த் தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
> அறைகழல் ஆர்க்கநின்று அனலெரி யாடுமாறே
> எனும் திருப்பதிகத்தால் உணரலாகும். (4/22/8)

இடர்பாவம் துக்கம் வேட்கை வெறுப்பு இவை உலகை ஓடிக்குடைகின்றன. அவை எமை வருத்தா. நான் அவற்றிற்கு நுகர்பொருளும் அல்லேன். துன்பங்கள் எமைப் பகட்டுக்காட்டி ஏதும் செய்யா. யான் அப்போதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவசிந்தனை

ஆராலும் அளந்தறிய முடியாத அப்பனடி
சீராகப் பரவிநாம் சிவதொண்டு செய்குவமே

சித்தாண்டி வேற்குமரன் திருவடிகள் முடிமீதில்
வைத்தாண்டி வாட்டமின்றி வளர்ந்திடுமே சிவதொண்டு

பத்தாய தொண்டர்பலர் பல்லூழி பணியாற்ற
வித்திட்ட வீரனருள் வேண்டுவமே எக்காலும்

செத்தாரைப் போற்றிரிந்து சிந்தையிலே சிவம்பெருக்க
வைத்தானை வாழ்த்தி வைகுவமே வையமதில்

சிவதொண் டதனைச்செய்து சீவன் சிவமாக்கும்
தவமாற்ற வைத்தவெங்கள் சற்குரு தாள்கள் வாழ்க

சித்தாண்டிக் குடிவாழும் தேவாவுன் திருவடியே
எத்தாலும் தஞ்சமென் றேத்தியாம் வணங்குவமே

தொண்டாற்ற ஆளில்லை என்றுயாம் துணுக்கமுறக்
கண்டும்நீ கருணைதனைக் காட்டா திருப்பதென்னோ

வண்டார் குழலுமையாள் மகிழ்ந்தெடுத்த பாலகனே
கண்டார் களைதெளியும் கந்தனே கருணைசெய்வாய்

ஆரூரானைக் கடுகிச் சென்றடைவேன் என்பது அப்பர் வாய்மொழி.

''இடர் பாவம் எனமிக்க துக்கவேட்கை வெறுப்பே
அனைவிரும் உலகை ஒடிக்
குடைகின்றீர் ... ... ... ... ... ... ...
... ... ... ... ...
நும்மால் ஆட்டுணேன் ஓட்டந்திங்கு அலையேன்
மின்னே''

(6 / 26 07)

இனி 4 ஆம், 5 ஆம், 6 ஆம் திருமுறைகளில்வரும் ஒருபொல்லாப்பும் இல்லை என்பது குறித்து வரும் கருத்துக்களைச் சுருக்கித் தொகுத்துத் தருவசம்.

பார்த்திருந்து பரவிப்பா மூர்த்தியே முதல்வா சிற்றம் பலத்து ஆதியே என்று ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார் கங்கையைச் சடைமேல் வைத்ததிரு நீலகண்டம் எத்துவார் இடர்கள் தீர்ப்பார். கழிப்பாலை சேர்ப்பனாம் கண்ணுதல். நினைவதற்கு நெஞ்சினைத் தந்த நித்தமணாளர். வெந்துயர் தீரவைத்தார் என்று விம்மிதம் அடைகின்றார்.

விண்ணவர் பரவிஏத்த, வியன்பூதர் பாடியாட நடம் நவில் நம்பன்; பத்தர்கள் தங்கள் ஏதங்கள் தீரநின்றார் என்கின்றார். சடையுள்ளே கங்கையும் பாம்பும்வைத்தகடவுள்! விடையுகந்தேறும் விமலர் அன்பர் தங்கள் இடரவைதீர நின்றார். ஆவடுதுறை அரன் அடைபவர் இடர்கள் தீர்ப்பார் அவன் திருவடி துன்பக்கடல் கடக்கத்தோணியாகும்; அவனை வழிபட்டால் துன்பம் இன்றி இன்பம் எய்தலாம். (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலாவிறச் சிரித்திட்டேனே. அல்லது நினைப்பற நினைதல்

"காலை எழுந்திருந்து கைகால் முகங்கழுவிக் கோலமலரெடுத்துக் குருபதத்தைக் கும்பிட்டுத்" தியானத்தமர்ந்தேன். ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம் மந்திரப் பாமலர்களை ஒவ்வொன்றாகச் சிந்தையிற் செபித்துத் தியானம் பயின்றேன். இடையிடையே சித்தம் சிதறியபொழினும், உலகை மறந்து உள்ளே உள்ளே சென்று தண்ணென்ற சாந்தபத இயற்கையைத் தொட்டு நிற்கும் அனுபவமும் விளைந்தது. தியானம் நிறைவுற்ற வேளையின் மனம் பரபரப்பற்று ஓய்ந்து தெளிந்திருந்தது. தெளிந்த சிந்தையனாய் அருள்மொழிகளில் ஒரு மாணிக்க மொழியை வாசிக்கும் நியமப்படி நூலை விரித்தேன். மேல் வரும் வாசகம் கண்ணிற்பட்டது.

> "கடவுளை ஏமாற்றுவதுதான் பெரிய ஏமாற்று, ஒருவன் ஒரு நாளைக்கு 5 நிமிடம் 10 நிமிடம் கால்மணிநேரம் அரைமணிநேரம் அல்லது ஒரு மணிநேரம் நினைக்கலாம்; கூடஇருக்கிற கடவுளை நெடுக நினைப்பது எப்படி"

அருள் மொழியின் பொருள் அற்புத சோபையுடன் விளக்கமாகியது. விளக்கமாகவே அடக்கொணாத பெருஞ்சிரிப்புத் தோன்றியது. வாய்விட்டுச் சிரித்தேன். அச்சிரிப்பு அப்பரடிகளின் "வெள்கினேன்; வெள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே" எனும் வாசகத்தை நினைவூட்டுவதாயிருந்தது. அப்பரடிகள் 'உள்குவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்து அறியுந்தேவைக்காணக் கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கினேனே, என விலாவிறச்சிரித்தார், யானோ கூட இருக்கும் கடவுளை நினைப்பற நினையாது நாள் வாய்க் காலைமாலைப்போதெல்லாம் பாசாங்காக நினையும் கள்ளத்தியானத்தைச் செய்து காலத்தைக் கழித்தேனே என்பதை எண்ணிப் பெரியதோர் சிரிப்புச் செய்தேன்.

## தியானவேளைகளில் ஏமாற்று.

ஒரு தியானவேளையில் ஓம்தத்சத்ஓம் பாமலர்களை ஓதி 5 நிமிடமளவு கடவுளை நினைக்கக் கூடியதாக இருந்தது. அடுத்த சில பாடல்கள் எவ்வித சுவடுகளையும் பதியாமற் கடந்து சென்றமை குறித்து எச்சரிக்கையடைந்த போது, மனமானது பத்துவருடங்களுக்கு முந்திய ஒரு சோக அனுபவத்தில் மொய்த்துச் சோர்ந்து கிடப்பது தெரிந்தது. அதனைக் கூவி அழைத்துக் கூடக் குடியிருத்த வேண்டியதாயிற்று, இன்னொரு தியானவேளையில் 10 நிமிடமளவு பாமலர்களைச் சிந்தை செய்து கடவுளை நினைக்கக் கூடியதாக இருந்தது பின்னர் மெல்லவாக நழுவிச்சென்ற மனம் அன்றைய பகற்போதில் ஆற்றவேண்டிய கருமங்கள் பற்றி மிக்க கவனத்தோடு திட்டம் தீட்டிக் கொண்டிருந்தமையைக் கண்டு கவன்றேன். மற்றொரு தியான வேளையில் ஒன்றிய சிந்தையுடன் ஓம்தத்சத்ஓம் பாமலர்களை ஓதிக் கால்மணித்தியாலமளவு கடவுளை நினைக்கக் கூடியதாக இருந்தது. சற்றுநேரத்தில் தொடர்ந்துள்ள பாமலர்களைக் கடுகதியோடு செபிக்கும் காரணத்தை ஆராய்ந்த போது, கள்ள மனமானது பரம விரோதியொருவனைத் திட்டித் தீர்த்தற்குத் தக்கவார்த்தைகளைச் சேகரித்துப் பொரிந்து கொட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. வேறொரு தியானவேளையில் உலகைமறந்து உள்ளே உள்ளே சென்று அரைமணித்தியாலமளவு ஆண்டவனை நினைக்கக் கூடியதாக இருந்தது. அகமுகமாகித் தூங்காமல் தூங்கும் சுகத்தைச் சுகித்துக்கிடப்பதற்கான பக்குவகாலம் வந்து விட்டதென்றகளிப்பில் ஆர்வத்தோடு அடுத்தபாமலர்களை ஓதத்தொடங்கியது நினைவிலிருக்கிறது. தொங்கி வீழ்ந்த தலையை நிறுத்தி நிமிர்ந்த போது தான் தூங்காமற் தூங்கும் சுகத்துக்குப் பதிலாக சோம்பேறித் தூக்கமொன்றில் மூழ்கிக் கிடந்தமை தெரிந்தது. இவ்வண்ணமான இடையூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நிறைந்த தியான வேளையை எவ்வாறு வருணிப்பது? விசுவாமித்திரர் பக்குவமாக இயற்றிய வேள்வியிலே தாடகையரக்கி உதிரக் குப்பைகளைக் கொட்டி அருசைப்படுத்திய தாக இதிகாசத்தில் உள்ளது. அருந்தவ யோகரின் மந்திரமலர்களை ஓதித்தியானிக்கும் திவ்வியமான தியானவேள்வி மனத்தாடகை கொட்டும் அழுக்கு நினைவுகளால் மாசு படுத்தப் படுகின்றது எனக் கூறலாமோ? திரு விழாக் காலத்திலே வசந்தமண்டபத்திற் பெரு மான் சர்வாலங்கார பூஷிதனாய் திருவோலக்க மிருக்கும் தருணத்தில் வேதபாராயணஞ் செய்து பத்திரபுஷ்பஞ் சமர்ப்பிக்கும் பூசகர், தூங்கி விழ்ந்த வண்ணம் அதப்பிய வார்த் தைகளைச் செபித்து ஆகாதனவற்றை அள்ளி இறைத்தால் எவ்வாறிருக்கும் ?

விவகாரவேளைகளில் ஏமாற்று

ஒருவாறு தியானவேளை முழுவதும் - ஏறக்குறைய ஒரு மணித்தியாலயளவுகடவுளை நினைத்ததாக வைத்துக் கொள்வோம். இந்த நினைவு விவகாரவேளையிலும் இறைகளோ டியைந்த நினைவாயிருந்தாலன்றோ உண்மை நினைவாக அமையும். விவகார வேளைகளில் ஈசனை மறந்த நினைவுகள் எழுமாயின் அது பேச்சு, பேச்சு என்ற கிளி பெரும்பூனையைக் கண்டதும் கீச்சு கீச்சு என்ற கதையோ டொப்பதாய் வேடிக்கையாயிராதோ? தியான வேளையில்

''ஊனாய் உணர்வாய் உயிருக்குயிராய்
நானாய் நீயாய் நன்மையாய்த் தீமையாய்
வானாய் மதியாய் வாயுவாய்த் தேயுவாய்
தானாய் நின்றான் சச்சிதானந்தனே
ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம்''

ஆதிய மந்திரப்பாக்களை ஓதிச் சிந்தை செய் யும் போது எல்லாம் சிவமெனும் உண்மை அற்புதமாக உளத்திற்பதிகிறது ''பின்னமற்று எல்லாம் பிரமமே'' என்னும் பகுதியைச் செபிக்கும்போது சத்துரு மித்துரு என்ற பின் னமின்றி யாவரும் சிவசொரூபமே எனக் காணும் அறிவு மேலிடுகிறது. ஆனால் விவ கார உலகில் பரமவிரோதி என எண்ணியி ருக்கும் ஒருவரைக் காணும் போதோ ''இவன் முகத்திலும் விழிக்கக்கூடாது'' என்ற வாறாக வேறுபக்கம் பார்த்துக் கொண்டு செல்ல வேண்டியுள்ளதே.

தியான வேளையில்

''என் செயலாவதில்லைச் சிவனார்
தன் செயலென்னல் தகும்''

ஆதியவாசகங்களை ஓதித்தியானிக்கும் போது எனக்கெனச் செயலில்லை என்ற உறுதி பிறக் கிறது. ஆனால் விவகாரங்களில் ஈடுபடும் போதோ கோபுரத்தை அலங்கரிக்கப் பூட்டிய மின்விளக்குகளாலும் என்பெயரையே ஒளிரச் செய்ய முனைகின்றேனே.

அவன் அவள் அது எனும் அவையொரு மூன்றும்
சிவனார் விளையாட்டு''

என்பன போன்ற வாசகங்களைச் சிந்தை செய்யும் போது "விவகார உலகு வெறும் விளையாட்டு; இங்கு ஆவதும் ஒன்றுமில்லை அழிவதும் ஒன்றுமில்லை. எல்லாம் இருந்த படியே இருக்கின்றன; நாமும் இருந்த படியே இருப்போம்''என இருப்பாய் இருக்கின்றோம். விவகாரங்களில் ஈடுபடும் போதோ வாழ்க்கை ஒரு விளையாட்டோ? உயிர் போகிற காரிய மல்லவா? வாழ்வா? சாவா? வெற்றியா? தோல்வியா? என்றவாறாய் வாழ்க்கைப் போராட்டத்தில் யுத்த சன்னத்தராகி நிற்கி றோம்.

''ஈவோரிரச்சுவும் இரப்போரீவும்
தாய் சேயாகவும் சேய் தாயாகவும்
பேய் நாமாகவும், நாம் பேயாகவும்
மாய்வதைக் கண்டோம் மறவோம் திருவடி''

ஆதிய பாமலர்களைச் செபிக்கும் போது "ஏற்றத் தாழ்வுகள் உலக இயற்கை. இந்த மாய உலகை மதியாது தள்ளி வேத விழுப் பொருளையே கொள்ள வேண்டுமெனத் துணி கிறோம். உலக வாழ்விலோ, உயர உயரப் போக வேண்டும். பணம், பதவி, புகழ் என் னும் எல்லாவற்றிலும் ஒப்பாரும் மிக்காரு மில்லாத் தலைவனாகத் திகழ வேண்டும். எனக் கங்கணங் கட்டிக் கொண்டு செயற்பட வேண்டியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியான வேளையிலோ சித்திரக்காரன் தீட்டிய தீபம் போலிருப்பது முறைமையாயுள்ளது. விவகார வேளைகளிலோ வெளியே சுடர் விளக்கினைப் போல் நிலை கொள்ளாது சஞ்சலமுறுவதே இயல்பாகிறது. இவற்றையெல்லாம் நோக்க தியான வேளைகளிலே கட்டி வைத்த நாய் போன்றிருந்த மனம் விவகாரவேளைகளில் அவிழ்த்து விட்ட நாய் போன்று குதிகொண்டு திரிகிறது எனக் கூறுவதே பொருந்துவது எனத் தோன்றுகின்றது. உள்ளத்தினுள்ளே உலாவும் இறைவன் இக் கள்ளமனத்தின் வெட்கக் கேடான எண்ணங்களை அறிபாரா? குயிற் பாட்டிலே வரும் குயிலானது

"காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்"

எனும் இன்னிசைக் கீதத்தை மானிடனை நோக்கி இசைப்பது உண்மையாயின் அதே பல்லவியை மாட்டையும் குரங்கையும் நோக்கிப்பாடுவது முறையன்று அல்லவா? நீசக் குயிலின் அப் பசப்பு மொழிகளையெல்லாம் மறைந்திருந்து கேட்கும் மானிடன் அறியானா? காலைத் தியான வேளையில் உள்ளகத்து நாயகனாருடன் உறவாடி விட்டு, பகற்போதெல்லாம் ஊர்சுற்றிக் கூத்தாடிக் களைத்து மாலைப் போதிலே கைகால் முகங் கழுவி வெட்கமின்றி அந்த உள்ளகத்து நாயகனாரின் முன்னிலையில் வந்தமர்ந்து தியான சுலோகங்களைச் செபிப்பது எத்துணை ஏமாற்று வித்தை!

**எழுத்தில் அடங்கா ஏமாற்று வித்தை**

எழுதிக் காட்ட வொண்ணாத பெரிய ஏமாற்று வித்தை யாதெனில் கடவுளை மனதினால் நினைத்தல் என்பதாம்.

மனம் ஏதேனும் குணங் குறியுள்ள ஒரு பொருளைப் பற்றுக் கோடாகக் கொண்டே எண்ணுகிறது. கடவுளோ குணங்குறி யாதுமற்ற சொரூப வஸ்து. குணங் குறியுள்ளவற்றையே எண்ணும் இயல்பினதான மனம் குணமும் குறியுமற்ற கடவுளை எவ்வாறு எண்ணவல்லது?

மனம் பகிர் முகமாகச் செல்லும் இயல்பினது. கடவுளோ அகமுகமாகிக் காணவேண்டிய உள்ளத்தின் உள்ளே உறையும் ஒருவன். பகிர்முகப்பட்டுத் துள்ளும் மனம் எள்ளுக்குள் எண்ணெய் போன்றிருக்கும் கடவுளை எவ்வாறு எண்ணவல்லது?

மனக்குரங்கு ஒன்றை விட்டு ஒன்றைத் தாவிச் செல்லும் இயல்பினது. ஒன்றில் ஒன்றியிருப்பதே கடவுளை அறியும் வழிமுறை. தாவித் தாவிச் செல்லும் மனம் ஒன்றில் ஒன்றியுணரும் இறைவனை எவ்வாறு எண்ணவல்லது?

மனமானது ஓயாது சலிப்பது. கடவுளோ சலிப்பற்ற மோன நிறைவாயுள்ளவர். சலிக்கும் மனம், சலிப்பற்ற மெய்ப் பொருளை எவ்வாறு எண்ணவல்லது?

எண்ணங்களே மனம். எண்ணங்கள் தோன்றுமிடம் கடவுள். நினையும் மனம், நினைப்பின் வித்தான கடவுளை எவ்வாறு நினையும்? கண்ணுங்கண் தன்னைப் பார்க்குமா?

மனமோர் மாயைச் சடம். கடவுளோ அறிவு சொரூபமான சித்து. மனமாயை சின்மய சொரூபத்தை எவ்வாறு சிந்திக்கவல்லது?

இன்னோரன்ன காரணங்களால் மனத்தினால் மனங் கடந்த கடவுளை எண்ணுவது பெரிய ஏமாற்றாகும்.

மர்மமென்னவெனில் கடவுள் மயமாயிருக்கும் நமது உண்மை நிலையை நினையவொட்டாது தடுப்பது இந்த மனமாயையே. அது பொறிவழியே புகுத்தி நெறியில் நில்லாது அலைக்கும் பொல்லாத வஞ்சகம் கொண்டதாகும். காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் என்கின்ற அகப்பகை ஆறினதும் அன்னையாயுள்ளதும் இம்மன மாயையே. அது கடவுளை நினைப்பதாகப் பாசாங்கு செய்வதும் சூரபத்மன் தேவரூபம் கொள்வது போன்ற பெரிய மாயையே, கடவுளைத் தியானிப்பது போன்று பாவனை செய்து கடவுளை மறைத்துக் கொண்டிருக்கும் மனத்தை ஓர் 'இதசத்துரு' எனவருணித்தலே தகும். இந்த இதசத்துருவைத் துணைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டோ நாம் இறைவனை நினைக்க முயல்வது. இந்த மனத்தோணிப்பயணம் மருளெனும் பாறை தாக்கி மறிந்து சிதறுவதிலேயே முடிவதன்றி இடையறா இறைநினைவு எனும்திருவடிக்கரையை அடைவதற்கு உதவாது

ஆகவே மனதினால் நினையும் தியானம் ஓர்மயக்கமேயாகும். இதனாலேதான் அஷ்டாவக்கிரர் கீதை போன்ற உயர்ந்த ஞானநூல்களில் தியானமும் ஓர் பந்தமென்று வருணிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் சுவாமிகள் இந்த எண்ணிக் கொண்டிருக்கும் தியானபந்தத்தைக் கடக்க வேண்டுமென்பதை அழகாகக் கூறியிருக்கிறார். அவர் மெய்த்தியானம் பற்றிக் கூறியுள்ள வார்த்தை மேல்வருவதாகும்.

'தியானம் என்பது எதனையும் எண்ணிக் கொண்டிருப்பதல்ல; அது சும்மா இருப்பது ஆகும்''

எண்ணங்கள் அற்றுச் சும்மா இருப்பதற்கு முதலில் மனம் ஒழிய வேண்டும், மனத்தை மனமே ஒழிக்குமோ? ஆதலினால் மனோபாவனையாகச் செய்யும் நினைவுகளெல்லாம் பெரிய ஏமாற்றுவித்தையேயாம். மனம் அழிதலே முக்கியம் என்பதனைத் தாயுமான சுவாமிகள்

''சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம்
பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே''

எனக் கூறுவதால் அறியலாகும்,

எண்ணமெல்லாம் விட்டு ஏகாந்தமோன நிலை நண்ணுவதே கடவுளை நினையும் முறைமையாம் இந்த ஏகாந்த மோன நிலையிலே இடையறாது இறை நினைவு அமையும். இந்த இடையறா இறை நினைவையே நினைப்பற நினைதல் எனப் பெரியோர் கூறினர். எங்கள் சுவாமிகள் 'கூட இருக்கிற கடவுளை நெடுக நினைப்பது எப்படி' எனக் கேட்டிருக்கும் வினாவிற்குள் உள்ள விடை மனமொழிந்த விடத்தில் நிகழும் நினைப்பற நினைதல் என்பதேயாகும்.

தியான வேளைகளில் சித்தம் சிதறுதல் ஓர் ஏமாற்று. தியான வேளைகளில் ஐந்து நிமிடம் பத்து நிமிடம் கடவுளை எண்ணுதலும் ஓர் ஏமாற்று விவகார வேளைகளில் கடவுளை எண்ணுவது இன்னோர் ஏமாற்று. மாயா மனத்தினாலே இறைவனை நினைதல் என்பது ஏமாற்றுக்கள் யாவினும் பெரிய ஏமாற்றுதலே.

குறிப்பு: இவ்வுபதேசம் ஞான சாதனையிலே முதிர்ந்து வந்த ஓர் சாதகரை நினைப்பற நினையும் மேனிலையில் நிற்கச் செய்யும் பொருட்டு சுவாமிகளால் அருளப்பட்டதாகும். கோயில் வழிபாட்டையும் கடந்து மேலே செல்லுதல் வேண்டும்'' எனச் சுவாமிகள் அருளிச் செய்த ஓர் அமுதமொழி போன்றதே இஃது. சுவாமி அவரவர்க்குத்தக அருளிய பல் வேறு அருள் மொழிகள் நூலிலே உள. கோயில் வழிபாட்டினைச் செய் எனவும் நாடோறும் காலை மாலை உச்சி வேளைகளில் சிறிது நேரம் கடவுளை நினைதல் வேண்டும் எனவும் வேறு சில சாதகர்களுக்குச் சுவாமிகள் கூறினர், இவ்விடத்திலே அருள் மொழிகள் நூலின் முகவுரையிலுள்ள மேல் வரும் மொழியை அன்பர்கள் கருத்திற் கொள்வாராக.

''நோயாளர்க்குத்தக எவ்வாறு வைத்தியர் சொல்லும் மருந்து வகை வெவ்வேறாக இருக்கும் அவ்வாறே அவரவர் மனபரிபாக நிலைக்குத் தக்கவாறே அவ்வப்பொழுது அந்த அந்த அடியார்கள் தெளிவு பெறத்தக்கதாக இவை உபதேசிக்கப்பட்டுள்ளன. ஒருவரைக் கோயில் வழிபாடு செய் என்றும் வேறொருவரைக் கோயில் வழிபாட்டினை விட்டு மேலே செல் என்றும் அருளப்பட்டனபோல மேல் நிலையில் நிற்பார்க்கு முரணாம்லும் அதே நேரத்தில் கீழ் நிலையிலுள்ளார்க்கு முரண்படுவது போலத் தோன்றவும் அருளிச் செய்த உபதேச மொழிகள் சில இந்நூலிலே யிருக்கின்றன.''

**Meditation is not thinking of anything**
**It is remainirg** *Summa.*

( ஏதொன்றினையும் நினையாதிருத்தலே தியானம்; )
அது சும்மா இருத்தல் ஆகும். — யோகசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம்

( மலர் 61 இதழ் 3 - 4 பக்கம் 43 ன் தொடர்ச்சி )

1. அது நாம் ஓம் தத் சத் ஓம் மந்திரத்தை ஓதி அகலாத்தியானத்திருப்பதற்கான அறிவுறுத்தல்கள். 2. அருந்தவரின் முன்மாதிரியான தியானாநுபூதி. 3. மந்திரமுனிவர் தியான சாதகனுடன் உடனாய் நின்று தியானம் பயிற்றுதல், 4. மந்திரசாதகனின் சுயமானசாதனையின் தொடக்கமாக இறைவணக்கம் செய்தல் என்பன இதுவரைக் கூறப்பெற்றன. இனித்தியானப்பள்ளியறையைத் திறத்தற்கான சாதனை பயில்தல் கூறப்பெறும்.

## 4. மந்திரசாதகனின் சுயமான சாதனை

*ஆ. தியானத் திறவு*

**30. ஊசி முனையிலிருந்து ஓம்புக.**

ஊசி முனையி லிருந்தோம்பு வோர்களே
பேசி யறியார் பிறரை யுலகில்
நாசி வழியில் நடக்கும் பிராணனைத்
தேசி போலச் செலுத்த வல்லாரே
ஓதுக வதுநாம் ஓம் தத் சத் ஓம்

பொ-ள்: அது நாம் ஓம் தத் சத் ஓம் மந்திரத்தை ஊசிமுனையிலிருந்து தியானிப்பவர்கள், உலகிலே (ஒங்காரத்துட் பொருளான இறைவனையன்றி) வேறெவரையும் அறியார். அவர்கள் பேசவும் அறியார்; அவர்கள் இடைபிங்கலை வழியாக (நரிபோல்) இயங்கும் பிராணனை (சுழு முனை வழியாக) குதிரை போல் செலுத்த வல்லவர்கள். ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம்.

வி.ரை:- ஊசி முனையிலிருந்து ஓம்புதல்- ஒற்றைக் காலில் நின்று தவம் புரிதல், தீயில் நின்று தவம் இயற்றுதல் என்பனபோல ஊசி முனையினின்று தவமாற்றுவது ஒரு கடுந்தவமாகும். இதனை ஊசிமுனையிலிருந்து உக்கிரதவத்தை ஆற்றும் மாசில் மாதவர் எனச் சுவாமிகள் பிற இடத்தும் கூறினர். ஈண்டு ஊசிமுனையில் இருந்து ஓம்புதல் என்பது மிகக விழிப்புணர்வுடன் தியானத்திருத்தலைக் குறித்து நின்றது. அதாவது இறைவன் ஒருவனே உள்ளார்; அவ்வொருவனே ஒரு பெரும் விளையாட்டாக உலகக் காட்சியாகவும் தோற்றுகின்றார் எனும் உண்மையை ஓர்ந்து, உலகக்காட்சியை விட்டு உண்மைக் காட்சியைத் தொட்டு நிற்கும் தியான நிலையைச் சுட்டிநின்றது. "எட்டுக் கொண்டாரோடு தொட்டுக் கொண்டார்" எனும் திருவுந்தியார் உணர்த்துவதும் இதுவே. இறைவனே உலகாகவும் தோன்றுவது ஒரு பெரும் மருமமே. இந்த மருமத்தை விளங்கிக் கொண்டு உலக நினைப்பு அற்றுப்போக இறை நினைப்பில் சித்திரக்காரன் தீட்டிய தீபம்போல் சலனமில்லாது நிலையாய் நிற்றலே ஊசிமுனையிலிருந்து ஓம்புதலாம்.

பேசி அறியார் பிறரை: அறியார் எனும் முற்று பேசி, பிறரை எனும் இரண்டிடத்தும் கூட்டிப் பொருள் கொள்ளப் பெற்றது.

நாசிவழியே - தேசிபோலச் செலுத்தவல்லார்: ஒன்றில் ஒன்றித் தியானிப்போர்க்கு இயல்பாகவே இருவழியும் அடைத்து சுழுமுனா நாடி திறக்கும். சுழுமுனாநாடி வழியான பாய்ந்து செல்லும் பிராணஇயக்கம் குதிரையின் கதிக்கு உவமை கூறப்பெற்றது. இவ்வுவமை நோக்கி இடைபிங்கலை வழியான பிராண இயக்கத்துக்கு நரி எனும் உவமை வருவிக்கப் பெற்றது. இடைபிங்கலை வழியாகப் பிராணன் இயங்கும் போது இச்சையை நச்சும் இழிந்த உடல் நினைவும் உலகநினைவும் உளதாதலால் நரிக்கு உவமை கூறப்பெற்றது. சுழுமுனாநாடி வழியான இயக்கத்தின் போது இறை நினைவொன்றே நிலையாயிருக்கும் ஆதலால் குதிரைக்கு உவமை கூறப்பெற்றது "நரியை நற்பரியாக்கிட வேண்டுமே" என்ற வேண்டுதலும் இதுவே.

இப்பாடலினாலே நித்திய வஸ்துவில் சித்திரகாரன் தீட்டிய தீபம் போல் நினைப்பு மறப்பற்றிருந்து தியானித்தலே தியானப்பள்ளி அறையைத் திறக்கும் திறவுகோல் என்பது உணர்த்தப்பெற்றது.

**பொன்பொருள் தள்ளி இறைவனை உன்னுக.**

என்னைக் கணமும் பிரியா விறைவன்
அன்னை போல அன்பு சான்றவன்
பொன்னைப் பொருளைப் போகத்தைத் தள்ளி
உன்னு வோர்க ளுறுவர் பரகதி
ஓதுக வதுநாம் ஓம் தத் சத் ஓம்

பொ-ள்: என்னை இமைப்பொழுதும் பிரியாத இறைவன் அன்னைபோன்று மிக்க அருளையுடையவன். (இவ்விறைவனை) பொன் பொருள் ஆதிய போகங்களின் மேற்செல்லும் நினைவை நீக்கி உள்ளத்தால் உள்ளுவோர் சிவயோகத்திற் பொருந்துவர். ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம்.

வி-ரை: என்னைக்கணமும் பிரியா இறைவன். இறைவன் இமைப்பொழுதும் எம்நெஞ்சில் நீங்காதவனாக இருந்து நினைப்பித்துக் கொண்டிருக்கிறான் என்பது குறிப்பு. அன்னைபோல அன்புசான்றவன் - அந்த நினைப்பித்தலை மிக்க இரக்கத்துடன் செய்து கொண்டிருக்கும் குறிப்பினதாகும்.

பொன்னைப் பொருளைப் போகத்தைத்தள்ளி உன்னுக: மிக்க இரக்கத்துடன் இடையறாது எம்மை நினைப்பித்துக் கொண்டிருக்கும் இறைவனை நாமும் இடையறாது நினைதல் வேண்டும். இவ்விடையறா நினைவுக்கு இடையூறாக நிற்பது பொன் பொருள் ஆதிய உலக போகங்களிற் செல்லும் இழிந்த மனநினைவே இவ்விழிந்த மனநினைவை ஒழித்து மனம் ஆன்மாவில் இலயமாக, இறை நினைவாயிருத்தலே உன்னுதல் ஆகும். அதாவது உன்னுதல் என்பது உள்ளே உள்ளே சென்று உண்மையைத் தொட்டு நிற்கும் ஓர் அகமுக யோகமாகும் "உன்னில் உன்னும் உனாவிடில் விட்டிடும். எனும் அப்பரடிகளின் வாக்கையும் உன்னுக."

இப்பாடலினாலே உலகபோகத்தின் நீங்கி, சிவயோகத்திற் பொருந்தியவராய்த்தியானிக்கும் திறன் உணர்த்தப்பெற்றது:

**32. எங்கும் இவனொன்று ஏத்துக.**

எங்குந் திருவிழி யெங்கும் திருச்செவி
எங்குந் திருக்கர மெங்குந் திருக்கழல்
எங்குந் திருவடி வெங்கு மிவனே
எங்கு மிவனென் றேத்து வோமே
ஓதுக வதுநாம் ஓம் தத் சத் ஓம்

பொ.ரை: பார்க்குமிடமெங்கும் தோன்றும் கண்களெல்லாம் இறைவனின் திருவிழிகளே. காதுகளெல்லாம் இறைவனின் திருச்செவிகளே. கைகளெல்லாம் (அப்பெருமானாரின்) திருக்கரங்களே. கால்களெல்லாம் (அப்பூரணின்) திருப்பாதங்களே. வடிவமெல்லாம் (அவ்விஸ்வரூபனின்) வடிவங்களே. எங்கும் இவ்விறைவனே செறிந்து ஓங்கியுள்ளான். ஆதலால் எங்குமீசன் என்று தியானிப்போம் ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம்.

கு-ரை: எங்கும் திருக்கழல் எங்கும் திருக்கரம் எங்கும் திருவடி என்பதை விளக்கும் ஒரு சம்பவம் மேல்வருமாறு. கொழும்புத்துறை ஆச்சிரமத்திலே யோகசுவாமிகளின் முன்னையில் மெய்யன்பர் ஒருவர் அமர்ந்திருந்த பொழுது வீதியால் மீன்விற்றுச் செல்லும் ஒருவரின் ஒலி கேட்டது. அவரது கால்களை ஆச்சிரமத்திலிருந்து பார்க்கக் கூடியதாக இருந்தது. சுவாமிகள் மெய்யன்பரிடம் அக்கால்களைச் சுட்டிக்காட்டி "அது திருவடி" என்று அருளினார். தொடர்ந்து, சிவபெருமானின்றி அக்கால்கள் நடக்காவாதலால் "அது திருவடி" என விளக்கினார். மீனவன் கால்களிலும் திருவடியையே கண்ட இச்சம்பவம் எல்லாம் சிவரூபம் எனும் அளந்தறிய ஒண்ணாத உண்மையைச் சுவாமிகள் நேர் நேராய்க் கண்டு கொண்டிருந்தார் என்பதன் குறிப்பாகும்.

இப்பாடலினாலேதியானப்பள்ளியறையுள் நுழைதற்கு எங்கும் எல்லாம் சிவரூபம் எனத் தியானித்தல் வேண்டும் என்பது உரைக்கப்பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. எல்லாம் சிவன் செயல் என்று எண்ணுக.

என்செய லாவ தில்லைச் சிவனார்
தன்செய லென்னல் தருமென வெண்ணி
முன்செய் வினையெலாம்முழுதும்போக்கிப்
பின்செய் வினையிலை பிறப்பிறப் பிலையே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத் ஓம்.

பொ-ரை எனக்கெனச் செயலில்லை; எல்லாம் சிவன் செயலே என்பதைச் சிந்தையிற் பதித்து பழவினை முழுதும் போக்குவோம் வருவினையை இல்லாமற் செய்வோம். வினையில் விளையும் பிறப்பு இறப்பு எனும் பிராந்தியையும் இல்லையாகச் செய்வோம். ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம்.

வி. ரை: என்செயல் சிவனார் தன்செயல்:-
என் செயலாவது யாதொன்றுமில்லை
எல்லாம்
நின் செயலென்றுணரப் பெற்றேன்''

என்பதே பட்டினத் தடிகள் வாழ்வு உணர்த்தும் பெரும் பாடமுமாகும்.

முன்செய் வினையெல்லாம் முழுதும் போக்கி பின் செய் வினையிலை.

எல்லாம் சிவன் செயல் எனும் ஞானத்தீ பழவினை முழுதையும் எரிக்கவல்லதாகும். என் செயலாவதில்லை எனும் தெளிவுடன் செய்யும் செயல்கள் சிவதொண்டு ஆகும். சிவதொண்டாகச் செய்யும் செயல்களுக்கு வினை விளைவதில்லை, ஆதலால் வருவினை பிறவா.

பிறப்பிறப்பு இல்லை: வினையில் விளைவதே வினைப் பிறவியாதலால் வினையொழிந்து விடத்து வினைப்பிறவியும் இல்லையாகப் போம்.

இப்பாடலினாலே எல்லாம் சிவன் செயல் என்ற தெளிவுடன் தியானிக்கும் திறன் கூறப் பெற்றது.

34. யோக சமாதியில் இருந்து உணர்வாயே

எட்டாத கொப்பி லிருக்குந் தேனுக்குக்
கொட்டாவி கொண்டமுடவன் கொள்கை
போல்
அட்டாங்க யோக மறியா நாங்கள்
நட்டோ மென்று நவிறல் நகையே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம்.

பொ-ரை: அட்டாங்க யோகம் பயின்று யோக சமாதி யுறாத நாங்கள் அது நாம் எனும் அகலாத் தியானாநுபூதியிற் பொருந்த நாடுதல், முடவன் எட்டாத கிளையில் இருக்கும் கொம்புத் தேனைச் சுவைக்க வீணாசைப் படுதல் போன்று நகை விளைப்பதாகும். ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம்.

கு-ரை:- அட்டாங்க யோகம்; இயமம்; நியம முதலாய அட்டாங்க யோகத்தின் இறுதி நிலையான சமாதி. அதுநாம் எனும் அகலாத்தியானாநுபூதியேயாம். ஈண்டு அட்டாங்கயோகத்தினாற் பெறும் சமாதி அனுபவம் அது நாம் ஓம் தத் சத் ஓம் எனும் மந்திர மகத்துவத்தால் விளைதலைக் குறித்தது. என்னைக் கண முன் பிரியா இறைவன், எங்கும் இறைவன் எல்லாம் சிவன் செயல் என்னும் ஞானத் தெளிவினால் யோக சமாதி இயல்பாகக் கைவருதல் ஒருதலை.

இப்பாடலினாலே யோக சமாதியி லிருந்து அதுநாம் ஓம தத்சத் ஓம் அநுபூதியைச் சுகிக்கும் திறம் உணர்த்தப் பெற்றது

35. எல்லாம் நீயே என்றிரு

எல்லாம் நீயே என்றிருந்த மாதவர்
சொல்லாலே சொல்லப் புகார்நீ சும்மா
நில்லா யென்ன நிறுத்துவ ரதனை
நல்லோ ரறிவார் நயந்து போற்றுவோம்
ஓதுக வதுநாம் ஓம் தத் சத் ஓம்.

பொ-ரை: எல்லாம் சிவம் என்ற ஞானத் தெளிவில் இருந்த படியே இருக்கும் அருந்தவத்தோர் சொல்லாடலற்ற பேசா நுபூதியிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப் போர்

உயிர்கள் எஞ்ஞான்றும் இன்பத்தையே நாடி அலைகின்றன. இன்பமென்று தம்மாற் கருதப்பட்டவற்றை அநுபவிக்க வேண்டுமென்று கொண்ட ஆசையினாலேயே உயிர்களுக்கு வாழ்க்கை மீது வேட்கை உண்டாகின்றது எப்பிராணியும் வெறுமனே உயிரோம்புவதில் மட்டும் திருப்தியடைவதில்லை. இன்பம் இன்பம் என்றே உயிர்கள் அங்கலாய்த்துத் திரிகின்றன. இந்த இன்பவேட்டையில் ஒன்றோடொன்று போரிடுகின்றன; ஒன்றையொன்று கொல்கின்றன. "கொன்றனை யனைத்தும் அனைத்தும் நினைக் கொன்றன" என்றார் பட்டினத்தடிகளும். இவ்வாறே இன்பத்தை நாடிச்செல்லும் இவை சில காலங்களில் அமைதியாக இருந்து பெறக்கூடியனவற்றையும் போரிட்டு இழந்து விடுகின்றன. நீரிற் போர், நிலத்திற் போர், விசும்பிற் போர் எங்கு நோக்கினும் போர் நிகழ்ந்து வருதலைக் காணலாம். போர்மயமே உலகம் என்றுதானும் சொல்லத் தோன்றுகிறது.

இன்ப நுகர்ச்சியை நாடி நிற்கும் இவ்வுயிர்களெல்லாம் உண்மையான இன்பம் எங்கிருந்து வருகின்றது என்பதை உணராமையினாலேயே இவை ஒன்றோடொன்று மலைகின்றன. ஆன்மாவின் சுவரூபம் இன்பமேயாம் என்பதையும், அகத்தில் இருந்தே எவ்வித இன்பமும் ஊற்றெடுக்கின்றது என்பதையும் அறியாமையினாலேயே மக்களும் மாக்களும் புறத்தே அதனைத் தேடிப் போராற்றுகின்றனர். அஞ்ஞானங் காரணமாக உயிர்கள் இன்பத்தைத் தவறான இடத்தில் தேடுகின்றன. உண்மையில் இன்பம் தம்முள்ளேயே உள்ளது என்பதை உணர்ந்த போதே என்றும் இறவாத இன்பம், பேரின்பம் என்னும் அதனைப் பெறக்கருதி உயிர்கள் இறைவனை நாடுகின்றன. அப்போதேயே ஞானப்போர் உண்டாகின்றது. இப்போரே மிக விழுமிய போராகும். கந்தபுராணம் முதலிய நூல்களுள் உருவகப்படுத்தப்பட்டுள்ள போரெல்லாம் மாபெரும் வல்லமை படைத்த மாயையோடு உயிர் நடாத்தும் மாண்புமிக்க போரேயாம்.

இதுவோ மிக்க கடினமான போராகும். கீதையில் வில்வீரனாகிய அருச்சுனன் கண்ணனை நோக்கி, "கண்ணா! மனஞ் சஞ்சலம் உடையது; தவறும் இயல்பினது; வலியது; உரனுடையது. அதைக் கட்டுப்படுத்தல் காற்றைக் கட்டுப்படுத்தல் போன்று மிகவும் கஷ்டமான காரியம் என்று நான் கருதுகின்றேன்" என்று கூறுதல் காண்க. மாவலியின் சரிதம் ஈண்டு நினைவு கூரத்தக்கது. மகாபராக்கிரமசாலியாகிய மாவலி

---

66 ம் பக்கத் தொடர்ச்சி

நினைப்பார். அவர்கள் மனத்தை நில்லென நிறுத்திச் சும்மா இருப்பர். இம்மருமத்தை ஞானியரே அறிவர். இந்த ஞான நன்னிலையை ஏத்திப் போற்றிச் சாதனை செய்வோம் ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம்.

குறிப்புரை- எல்லாம் நீயே நான் சிவம், (31) (என்னைக்கணமும் பிரியா இறைவன்) எங்கும் சிவம், (32) எல்லாம் சிவன் செயல் (33) எனும் வாசகங்களின் பொருளைத் தொகுத்து உரைக்கும் தொகை மொழியாக உள்ள திறத்தை நயந்து போற்றுக.

நல்லார் அறிவார்: கற்கண்டின் சுவை அதனை உமியவர்க்கே தெரிவதுபோல சும்மா இருக்கும் தியானாநுபூதியைச் சும்மாஇருக்கும் ஞானியரே அறிவர்; அது சொல்லாலே சொல்ல முடியாதது என்றபடி.

(இவ்வைந்து பாடல்களாலும் தியானப் பள்ளி அறையில் நுழைதற்கான திறவின் திறன்கள் கூறப் பெற்றன. அவையாவன ஊசிமுனையிலிருந்து ஓம்புதல், என்னைக் கணமும் பிரியா இறைவன் என்ற தெளிவுடன் பொன்னைப் பொருளைப் போகத்தைத் தள்ளி உன்னுதல் எங்கும் சிவமென்றேத்துதல் எல்லாம் சிவன் செயலென்றிருத்தல், யோகசமாதியிலிருந்து உணர்தல். உண்மை முழுதுமென்றிருத்தல் என்பன.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகங்களையெல்லாம் வென்று இனி வெற்றி கொள்ளுதற்கு இடமில்லையென்று கண்டு தன் அமைச்சனை நோக்கி, "அமைச்சரே! இனி என்ன செய்வோம்? பொழுது போக்குதற்கு ஒரு புத்தி கூறும்" என்றான். மந்திரி அவனை நோக்கி, "மன்னர் மன்னவ! நீங்கள் உலகிலுள்ள அரசுகளையெல்லாம் வெற்றி கொண்டது உண்மையே. ஆயினும் நீங்கள் வெற்றி கொண்ட அரசுகளினும் மிகப் பெரியதும் பெருஞ் செல்வம் படைத்ததுமான ஓர் அரசு உளது. அந்த அரசையும் வென்றால் மட்டுமே நீங்கள் மாபெரும் யுத்தவீரர் என்று கருதப் படுவீர்கள்" என்றான். அதைக் கேட்டு அதிசயமுற்ற மாவலி மந்திரியை நோக்கி, "என்ன சொன்னாய்? நீ கூறும் அந்த அரசு எங்கேயிருக்கிறது? அதனை ஆளும் அரசன் யாவன்? கூறுவாயாக இதோ அவனை வெல்கிறேன்" என்று கூறிக்கொண்டு எழுந்தான். புத்திசாலியாகிய அமைச்சன் அவனை நோக்கி, 'அரசே! அந்த இராச்சியத்துக்குத் தலைவனாக உள்ளவன் மென்றன்மை வாய்ந்தவன். பிறர்க்கு இடையூறு விளையாதவன். எளிதில் அகப்படக் கூடியவன். ஆயின், அவன் அமைச்சனோ மாபெருந் தந்திரசாலி. விச்சையில் வல்லவன். சாமர்த்தியம் மிக்கவன். எவ்வகையாலும் அவனைக் கொல்லுதல் சாலாது. அவனை அடக்கினாலன்றி அந்த அரசுள் எவரும் நுழையமுடியாது. அவர்கள் தேவராயினும் மற்று எவராயினும் முடியாது." என்றான். "அப்படியா? அங்ஙனமாயின், யான் அந்த அரசை அவசியம் கைப்பற்றுதல் வேண்டும், அவ்வாறு செய்யத் தவறுவேனாயின் என் பெயர் மாவலியன்று!" என்று சூளுரை பகர்ந்தான். "எங்கிருக்கின்றது அவ்வரசு? சொல்லு. இதோ என்னோடு போருக்கு எழு" என்று அவசரப்பட்டான் மாவலி. அமைச்சன் மிக்க ஆறுதலாக அவனை நோக்கி, "அரசே! அஃது உம்முள்ளே உளது" என்றான். மாவலி வெட்கி வாயடங்கினான். நெடுநேரமாக ஆழ்ந்த சிந்தனையுள் அமிழ்ந்தினான் பின் மவுனங் கலைந்து மந்திரியை நோக்கி, "அமைச்ச! நீ கூறியது உண்மையே. அகத்தே இராச்சியம் புரியும் ஆத்மனாகிய அரசனை அவனது விச்சையில் வல்ல மனம் என்னும் அமைச்சனையடக்கினாலன்றி அடைய முடியாது. அவனை அடக்குவதென்றால் எத்துணைக் கஷ்டம்! எனினும், ஒருவன் தன் ஆத்மாவைப் பெறாதவிடத்து இவ்வுலகம் முழுவதையும் பெற்றுமென்?" என்று கூறிக் கவன்றான்! அன்று தொடக்கம் அவன் ஆன்ம நாட்டமுற்றவனாய் இறை வழிபாட்டில் திளைத்தான் என்று வரலாறு கூறுகின்றது. கள்ளைக் குடித்து மயங்கி நிற்கும் நிலையில் தேளாலும் கொட்டப் பெற்ற ஒரு மந்திக்கு மனத்தை உவமையாகக் கூறுதல் உலகறிந்த தொன்றல்லவோ? 'கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்' என்றற்றொடக்கத்துக் காரியங்கள் பலவற்றையுஞ் செய்து முடிக்கலாம் என்று அடுக்கிச் சொல்லி வந்த தாயுமான அடிகள் "சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது" என்றுகூறுதல் காண்க.

இறையருள் பெற்றுத் திருவருளாகிய குருவருள் பெற்றார்க்கே இது கைகூடும். இவ்வகையில் நிகழ்த்தும் போரன்றோ போர்" அப்போரில் வெல்லும் பெரியோரல்லரோ உண்மையிற் பெரிய போர் வீரர்! அத்தகைய போர் வீரர்கள் பிறரையும் போர் வீரர் ஆக்கும் மதுகை வாய்ந்தோராவர். நினைத்தாலுமே வீரம் பிறக்க வைக்கும் சீரிய இப் போர் வீரர் வாழ்க. வாழ்க அவர் திருவடி இப்போர் நாளும் வெல்க.

"எங்களுக்குள்ளே தான் சுயராச்சியம்
எவ்வளவு போர் புரிய வேண்டும்"

– அருள்மொழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன்

உ

## சிவயோக சுவாமிகளின் திருவுருவப் பிரதிட்டை

"எண்ணிய வண்ணம்வாழ எமக்குநல்
லருளையீந்த
கண்ணிய முடையசெல்வன் கழலடி
என்றுங்காப்பு"

சௌபாக்கிய முடைச் சிவயோகக் குருமணியைக் கௌரவத்துடன் பூசிக்க வேண்டாவோ? தூயசுகவாரிதிதோய் தேசிகமூர்த்தியை ஆனைந்தால் ஆட்டி வழிபட வேண்டாவோ? இவ்வண்ணம் அபிடேக அலங்காரங்களுடன் பூசித்தற்கேற்றதோர் திருமேனி இருவருடங்களுக்குமுன் செங்கலடி சிவதொண்டன் நிலையத்திற் பிரதிட்டை செய்யப்பட்டது. இதனிலும் சற்றுப் பெரிதானதோர் திருவுருவம் இவ்வாண்டுக் குருபூசை நாளன்று (20. 3. 97) யாழ் / சிவதொண்டன் நிலையத்திற் பிரதிட்டை செய்யப்பட்டது.

அன்று காலை சிவதொண்டன் நிலையம் விழாப் பொலிவு தோன்ற நின்றது. முன் வாயிலில் அழகியதோர் தோரணம் அமைக்கப் பெற்றிருந்தது' நிலையத்தின் அருகாமையிலுள்ள இல்ல வாயில்களிலெல்லாம் கோலமிட்டுக் கொத்து விளக்கேற்றி நிறைகுடம் எடுத்துப் பொலிவு பெறச் செய்திருந்தார்கள். வீதியெங்கும் உயர்ரகமான தூபம் கமழ்ந்தது. அடியரெல்லாம் தீர்த்தங்களாடித் திரிகரணம் தூயராய்க் குழுமிக் கொண்டிருந்தனர்.

காலை எட்டரை மணியளவில் தியான மண்டபத்தில் திருவடி பூசை நிகழ்ந்தது; பூசையின் பின் திருவடி புராணமண்டபத்திற்கு எழுந்தருளியது. சிவப்பிராமணோத்தமர் வேத பாராயணஞ் செய்ய அணுக்கத்தொண்டர் சிலர் பெரியதோர் கலசத்தை ஏந்தி வந்து திருவடியின் அருகே வைத்தனர் செந்நெல் நிரம்பிப் பொலிந்த அக்கலசத்தினின்றும் சுவாமியின் திருப்படிமத்தை எடுத்து'நேத்திரம் திறக்கும்'கருமத்தைப் பக்குவமாகச் செய்தனர், கண்ணுக்குக் கண்ணான சுவாமி கருணா நோக்கத்தினராய் நின்றார். செம்மமெல்லாம் தீர்க்கும் திவ்விய பார்வை கொண்ட திருமேனியர்க்கு கர்ப்பூர தீபங்காட்டினர். ஆர்வம் மீதூர்ந்த அடியார் கூட்டத்தினின்றும் நாத்தழுதழுத்த குரலொன்று' காணக்கண் அடியேன் பெற்றவாறே' எனக் குழறியது. சுவாமி ஞான வீறு பொலியப் பீடுடைய பெருமானாகத் தோன்றினார். கருணைபூத்த திருமுகத்திற் றோன்றிய ஒப்பற்ற உபசாந்தம் வீரசாந்தம் என்பதன் விளக்கமாயிருந்தது. திருமேனியின் அபயகரம்வினைப்பகைநீக்கும்வித்தகத்தொண்டன் என விருது கூறிநின்றது, வரதகரமோ வஞ்சம் பொறாமை கோபம் வைத்திடும் மாந்தர்க்கும் அஞ்சாதே என்றருளையீந்திடும் சுதந்திரன் என்னும் வாய் மொழிக்கோர் இலக்கிதமாகத் திகழ்ந்தது. திருவருளானது பக்குவமானவோர் ஸ்தபதியை அதிட்டித்து நின்று சிவயோக சுவாமிகளின் திருப்படிமத்தை வடித்தெடுத்துள்ளது என்றே தோன்றியது. இதயவெளியிலே இது அவன் திருவுரு இவன் அவன் எனும் திருவாசக ஒலி மீட்டும் மீட்டும் இசைப்பது போன்றிருந்தது. சுவாமி தாம் போர்த்த மானிடச் சட்டையால் தமது உண்மைச் சுபாவத்தை வேண்டுமென்றே மறைத்துத் திரிந்தார் இந்தத் தெய்வத் திருமேனியே அவரது உண்மை ரூபம் என உளம் சிலிர்த்தது.

பத்தரைமணியளவில் அபிடேகம் தொடங்கியது. திருவடிக்கும் திருமேனிக்குமான திவ்விய அபிடேகம் ஒரு மணித்தியாலமாக நிகழ்ந்தது சுவாமி ஏதுமொன்றற இருந்த படியே இருக்கும் ஞானச்சுடர் விளக்கெனினும் அவ்வப்போது நல்லூரானுக்கு அபிடேகம்செய்யும் நியமத்தவராயிருந்தார். அந்த ஞானச்சுடர் விளக்கு இப்பொழுது நறுநெய்யொடு பால், தயிர், பஞ்சாமிர்தம், கத்தூரி, கமழ்கந்தம் என்பவற்றால் அபிடேகம் ஆடிப் பொலிவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை

## அபயப் பத்து

அப்பனே ஆருயிரே யன்பேயென் னாதரவே
ஒப்பிலா வொன்றே ஊழியெலா மானவனே
வைப்பிலா வாழ்வே மவுனமணிப் பெட்டகமே
இப்புவியெ லாம்புகழு மிலங்கைநக ரீச்சுரனே. 1

ஆறுபிறை கொன்றைதும்பை யரவு சடையாட
நீறுபொலி மேனி நின்றெழிலைக் காட்டிவிட
மாறுபடு மரக்கன் மலரடியின் கீழ்க்கிடக்க
ஆறுபொலி யிலங்கை யாண்டவனே நினக்கபயம். 2

இருநிலனாய்த் தியா யிரவி மதியாகி
வருபுனலாய் மாருதமாய் மறிகடலாய் மன்னுயிராய்க்
குருவாகிச் சீடனாய்க் கூறவொண் ணாச்சுடராய்
மருவிநிற் கும்மிலங்கை மணியே யுனக்கபயம். 3

ஈரவார் செஞ்சடையாய் எழிலார் மழுப்படையாய்
பாரமார் கொம்மைமுலைப் பாவை யிடமுடையாய்
கோரமார் கொல்புலியைக் கொன்றுடுத்த கொற்றவனே
ஆரமுதே நல்லிலங்கை யாண்டவனே யுனக்கபயம். 4

உயிரெல்லா மாகியு மாகாத வுன்பெருமை
பயிலப் படும்விதமோ பாரளந்தோன் காணரிய
உயிருண் சுடர்மணியே உம்பர்பணி மெய்ப்பொருளே
மயில்குயில் பயிலிலங்கை மாமணியே யானபயம். 5

ஊருமில்லாய் பேருமில்லாய் உற்றார்பெற் றோருமில்லாய்
சீருஞ் சிறப்புமுள்ளாய் செக்கர்வான் மேனியனே
ஆரும் புகலரிய ஆற்றல்விடை யேறுமையா
காருந் தொழுமிலங்கைக் கடவுளே யுனக்கபயம். 6

எல்லாஞ் செயவல்ல விறைவனே யென்குருவே
நல்லார் தொழுதேத்தும் ஞானமணிப் பூடணமே
கொல்லா நெறிநின்ற குரவர்தொழும் மெய்ப்பொருளே
எல்லா வளமுஞ்சே ரிலங்கைமன்னே யுனக்கபயம். 7

ஏக னனேகனென்று மிமயமலை வாசனென்றும்
மோகமார் தக்கனைமுன் முடித்த முதல்வனென்றும்
போகமார் பூண்முலையாள் பொருந்திய பாகனென்றும்
யோகநாதன் பணியிலங்கை நாதா வுனக்கபயம். 8

ஐயம் புகுந்துமுனிவர் ஆணவத்தை முன்னழித்தாய்
தையல் தனக்குந்தன் பாதி யுடல்கொடுத்தாய்
வெய்ய மதனாகம் வெந்துவிழ நீவிழித்தாய்
தெய்வமே யிலங்கைநகர்ச் சிவனே யுனக்கபயம். 9

ஒன்பதுவாய்த் தோற்பைக்கா யிரவு பகலுழலும்
என்மதிக் கின்னு மிரங்காமல் நீயிருந்தால்
என்செய்வே னென்குருவே யெவர்க்குநா னெடுத்துரைப்பேன்
சொன்னம் பயிலிலங்கைச சோதி யுனக்கபயம், 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தமளித்தது. அடியவர்கள் நற்சிந்தனை யும், திருமுறையும் தித்தித்து ஓதினர்.

அபிடேக ஆராதனைகளின் பின்சிவவேதியர் கள் வேத ஒலிமுழங்க வேள்வியியற்றிப் பிர திட்டாகருமத்தைதமுறையாய்த் தொடங்கினர். உயிர்க்குலமெல்லாம் விளக்கமுறும் உச்சிப் போதில் மங்கலவாத்தியங்கள் ஒலிக்க மூவர் களும் ஒன்றாகச் சேர்ந்த சிவயோகதேசிக மூர்த்தம் பிரதிட்டை செய்யப்பட்டது. சர் வாலங்கார பூஷிதனாய் நின்றருளிய சுவாமி தரிசனம் "சற்குருதரிசனம் சகலபாக்கியசுகம்" எனும் மங்கல இசைக்குப் பொருந்தியதாயி ருந்தது.

பிரதிட்டாகருமத்தின் பின் சுவாமி வீதி உலாக்காண்பதற்கான பூசனை நிகழ்ந்தது. சுவாமி ஓங்காரத்துள்ளே ஒளிரும் சிவக்கொ ழுந்தாய் எழுந்தருளினார். அமைதியான காலமெனின் சுவாமி நல்லூர்த் தேரடிக்கும், கொழும்புத்துறைக்கும் சென்று சிவதொண் டன் நிலையத்தைச் சேரும் நீண்டதோர் யாத் திரை நிகழ்ந்திருக்கும். இப்பொழுதோ சுவாமி சிவதொண்டன் நிலையத்து வலப்பக்கத்துவாயி லால் வெளிப்போந்து இடப்பக்க வாயிலால் உட்புகும் அளவில் அமைந்து விட்டது. ஆயி னும் என்ன? சுவாமி அண்டசராசர மெல் லாம் அகத்திலே தரிசித்துக் கொண்டிருப்ப வரன்றோ; அவர் கோயில் கொண்டிருக்கும் இடத்தை வலம் வருவது அவனியெல்லாம் வலம் வருதலை ஒக்குமன்றோ. மண்போட் டால் மண் விழாதபடி கூடிக் கொண்ட மாந் தர்கூட்டத்தாலும், ஆடல், பாடல் ஆனந்தக் கூத்து, அரகர ஒலி என்பவற்றாலும். பரவ சமூட்டும் மங்கல வாத்திய இசைகளாலும் அது ஒருபெருவுலாவாகவே அமைந்துவிட்டது.

மண்ணினிற்பிறந்தார் பெறும் பயன் இரண்டு; ஒன்று:- மதிசூடும் அண்ணலாரது விழாப் பொலிவுகண்டு ஆறுதல். சிவயோகக் குருமணி சிவபிரானிலும் வேறலரன்றோ! ஆதலால் சிவயோக சுவாமிகளின் விழாப் பொலிவுகண்டகண்கள் மண்ணினிற் பிறந்த பயனொன்று பெற்றவாயின. இரண்டாவது பயன், மதிசூடும் அண்ணலாரடியார் தமை அமுது செய்வித்தல். அன்றையப் பொழுதில் பூசனை முடிந்ததும் அமுது செய்விக்கும் பணி யும் பொழுதுசாயும்வரை அற்புதமாக நிகழ்ந் தது. ஆயிரக்கணக்கான அடியார்கள் திருவ முது செய்து சென்றனர்.

இத்தகைய சிவகருமங்கள் நிகழ்ந்த இடத்து இறந்தவர் உயிர் பெறுதலும் இயல் பன்றோ; எமது அழிந்த மண்ணும் புத்துயிர் பெற்று எழுக.

மண்ணி னிற்பிறந்தார்பெறும் பயன்மதி
சூடும்
அண்ணலாரடி யார்தமை அமுதுசெய்
வித்தல்
கண்ணி னாலவர் விழாப் பொலிவு
கண்டார்தல்
உண்மை யாமெனி லுலகர்முன் வருகென
வுரைப்பார்,

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

பல்லவி

சற்குரு தரிசனம் சகலபாக்கிய சுகம்
தாளிணை பணிந்தி தினம்,

அநுபல்லவி

தாந்தன்னை யறியுமே
சாந்தமுஞ் செறியுமே (சற்குரு)

சரணங்கள்

பேரன்பு பெருகிவிடும் பேதமை கருகிடும்
பிரியாப் பிரியமெல்லாம் பேசாம லகன்றிடும்.(சற்குரு)
ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்திடும்
ஆசாபாச மகலும் நேசானு பூதிவரும். (சற்குரு)
தேவாதி தேவர்களுஞ் செய்வார் பணிவந்து
சீவன் சிவனென்னுந் தெளிவுமுண் டாகுமே(சற்குரு)

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்குங்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

- திருமூலர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Sivathondan

# HINDUISM

The Hindus have received their religion through revelation, the Vedas. They hold that the Vedas are without beginning and without end. It may sound ludicrous to this audience, how a book can be without beginning or end. But by the Vedas no books are meant. They mean the accumulated treasury of spiritual laws discovered by different persons in different times. Just as the law of gravitation existed before its discovery, and would exist if all humanity forgot it, so is it with the laws that govern the spiritual world. The moral ethical and spiritual relations between soul and soul and between individual spirits and the Father of all spirits were there before their discovery, and would remain even if we forgot them.

The discoverers of these laws are called Rishis, and we honour them as perfected beings. I am glad to tell this audience that some of the very greatest of them were women.

Here it may be said that these laws as laws may be without end, but they must have had a beginning. The Vedas teach us that creation is without beginning or end. Science is said to have proved that the sum total of cosmic energy is always the same. Then, if there was a time when nothing existed, where was all this manifested energy? Some say it was in a potential form in God. In that case God is sometimes potential and sometimes kinetic, which would make Him mutable. Everything mutable is a compound, and everything compound must undergo that change which is called destruction. So God would die, which is absurd. Therefore there never was a time when there was no creation.

If I may be allowed to use a simile creation and creator are two lines, without beginning and without end, running parallel to each other. God is the ever active providence, by Whose power systems after systems are being evolved out of chaos, made to run for a time, and again destroyed. This is what the Brahmin boy repeats everyday: '*The sun and the moon, the Lord created like the suns and moons of previous cycles.*' And this agrees with modern science.

★ ★ ★ ★ ★

Here I stand and if I shut my eyes, and try to conceive my existence, 'I,' 'I', 'I', what is the idea before me? The idea of a body. Am I, then, nothing but a combination of material substances? The Vedas declare, 'No!' I am a spirit living in a body I am not the body The body will die, but I shall not die. Here am I in this body; it will fall, but I shall go on living. I had also a past. The soul was not created, for creation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

means a combination, which means a certain future dissolution If then the soul was created, it must die. Some are born happy, enjoy perfect health with beautiful body, mental vigour, and all wants supplied. Others are born miserable; some are without hands or feet; others again are idiots, and only drag on a wretched existence. Why, if they are all created, why does a just and merciful God create one happy and another unhappy. why is He so partial? Nor would it mend matters in the least to hold that those who are miserable in this life will be happy in a future one. Why should a man be miserable even here in the reign of a just and merciful God?

In the second place. the idea of a creator God does not explain the anomaly, but simply expresses the cruel fiat of an all-powerful being There must have been causes, then. before his birth, to make a man miserable or happy and those were his past actions.

Are not all the tendencies of the mind and the body accounted for by inherited aptitude? Here are two parallel lines of existence one of the mind, the other of matter· If matter and its transformations answer for all that we have, there is no necessity for supposing the existence of a soul. But it cannot be proved that thought has been evolved out of matter and if a philosophical monism is inevitable, spiritual monism is certainly logical and no less desirable than a materialistic monism, but neither of these is necessary here.

We cannot deny that bodies acquire certain tendencies from heredity, but those tendencies only mean the physical canfiguration through which a peculiar mind alone can act in a peculiar way. There are other tendencies peculiar to a soul caused by his past actions. And a soul with a certain tendency would, by the laws of affinity, take birth in a body which is the fittest instrument for the display of that tendency. This is in accord with science, for science wants to explain everything by habit, and habit is got through repetitions. So repetitions are necessary to explain the natural habits of a new-born soul. And since they were not obtained in this present life, they must have come down from past lives.

There is another suggestion· Taking all these for granted, how is it that I do not remember anything of my past life? This can be easily explained· I am now speaking English. It is not my mother tongue; in fact, no words of my mother tongue are now present in my consciousness; but let me try to bring them up, and they rush in. That shows that consciousness is only the surface of the mental ocean, and within its depths are stored up all our experiences. Try and struggle, they would come up, and you would be conscious even of your past life·

This is direct and demonstrative evidence. Verification is the perfect proof of a theory, and here is the challenge thrown to the world by the Rishis. We have discovered the secret by which the very depths of the ocean of memory can be stirred up—try it and you would get a complete reminiscence of your past life.

( To be continued )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவதொண்டன் சபை
## வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | நற்சிந்தனை (a) சாதாரண பதிப்பு | 60-00 |
| | (b) நூலகப் பதிப்பு | 65-00 |
| 2. | NATCHINTHANAI (*English Edition*) | 50-00 |
| 3. | நற்சிந்தனைக் கீர்த்தனைகள் - சாதாரண பதிப்பு | 12-00 |
| | நூலகப் பதிப்பு | 15-00 |
| 4. | சைவசித்தாந்தக் கட்டளைக் கும்மி (மூலம்) | 2-50 |
| 5. | யோகசுவாமிகள் வாழ்க்கையும் வழி காட்டலும் | 65-00 |
| 6. | விவேக சூடாமணி | 15-00 |
| 7. | என் நெஞ்சில் இடம் கொண்ட ஒரு பெரியார் — யோகசுவாமிகள் | 20-00 |
| 8 | நமச்சிவாயமாலை | 15-00 |
| 9. | தியானகாலச் சிந்தனை (புதிய 3ம் பதிப்பு) | 35-00 |
| 10. | யோகசுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 50-00 |
| 11. | சிவத்தியானமாலை (உரையுடன்) | 15-00 |
| 12. | தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் — பொழிப்புரையும் | 200-00 |
| 13. | தாயுமான சுவாமிகள் பாடல் (மூலம்மட்டும்) | 80-00 |
| 14. | சைவத்திருமுறைத் திரட்டு (புதிய 3ம் பதிப்பு) | 100-00 |
| 15. | HOMAGE TO YOGASWAMY | 10-00 |
| 16. | சண்முக கவசம் | 25-00 |
| 17 | சிவதொண்டன் – செந்தமிழ் – ஆங்கிலத் திங்கள் வெளியீடு, | |

ஆண்டுச் சந்தா (a) உள்நாடு ரூபா 100-00
(b) வெளிநாடு S 14-00

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பிற் பெறும் இடங்கள்:-

Dr. சோ. சண்முகசுந்தரன்
5. மூர் வீதி,
கொழும்பு - 6
T. P. 580584

திரு. ம. திலகரட்ணம்
25/A பாமன்கடை ஒழுங்கை,
கொழும்பு - 6
T. P. 01-583102

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக்கட்டளை, தபாற்கட்டளை காசோலை முதலியன அனுப்பவேண்டிய பெயரும் விலாசமும்

Cheque, Drafts and money orders
Should be drawn in favour
of Sivathondan Society
434, K. K. S. Road, Jaffna or

A. Chellathurai
Sivathondan Nilayam
Chenkaladi.

Bilingual Monthly Registered at the G. P. O. as Newspaper
No. R. B. N. 782/1961.

Printer: M. ANANDARATNASAMY
57B, St. Anthony's Street, Batticaloa.

Publisher: A. Chellathurai
(a) Printed at NEW KEEN PRINTERS, BATTICALOA.
(b) Published for: Sivathondan Society Ltd.
434, K. K. S. Road, Jaffna, Sri Lanka.

Date of Publication: 1st May 1997
Editor: A. Chellathurai
Sivathondan Nilayam
Chenkaladi E. P.
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org